Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 140

ஞாயிற்றுக்கிழமை
14 ஏப்ரல் 2024

சித்திரை 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முரளி**



"நாட்டை ஆளுறவையே ஆயிரமாயிரம் சுத்துமாத்துகள் விடேக்க உந்தக் கடைக்காரர் ஆயிரம் ரூபா வேண்டினது பெரிய விசயமில்லை கண்டியளோ"

# வடக்குப் பாடசாலைகளில் 116 அபாயக் கட்டடங்கள்!

## அவற்றில் எத்தனை இடித்தழிக்கப்பட்டன?

## கல்வித் திணைக்களம் கைவிரிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 14**

**வடக்கு மாகாணத்திலுள்ள 12 வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் 116 அபாயகரமான கட்டடங்கள் இருப்பதை உறுதி செய்துள்ள வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் அவற்றில் எத்தனை கட்டடங்கள் இடித்தழிக்கப்பட்டுள்ளன என்ற விவரங்கள் தமது திணைக்களத்தின் வசம் இல்லை என்று தெரிவித்துள்ளது.**

15

## ஒரு வடை, ஒரு தேநீர் ஆயிரம் ரூபாவுக்கு!

### சுற்றுலாவியிடம் சுத்துமாத்து

கொழும்பு, ஏப். 14

டிம் டென்ஸ் என்ற பெல்ஜிய சுற்றுலாவியிடம் ஒரு வடை மற்றும் ஒரு தேநீருக்கு ஆயிரம் ரூபா கோரிய உணவகம் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட அவர் இங்குள்ள இடங்களின் சிறப்புகள், உணவுகள் உள்ளிட்ட அனைத்தையும் யூரியூப் ஊடாக வெளியிட்டு வருகின்றார்.

15

## அரிசி இறக்குமதிக்கு அனுமதியில்லை

### இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, ஏப். 14

அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். எனினும் சுற்றுலா விடுதிகளில் தேவையான அளவு பாஸ்மதி அரிசியை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

16

### பலாலி - சென்னை

## ஜூனில் மற்றொரு விமானசேவை!

கொழும்பு, ஏப். 14

யாழ்ப்பாணம்-சென்னை இடையிலான விமானசேவையை இண்டிகோ நிறுவனம் ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிப்பது உறுதியாகியுள்ளது.

இந்த இணைப்பு வட மாகாணத்தில் பயணம் மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்தும், இரு நாடுகளுக்கு

15



குரோதி வருடம் நேற்று முன்னிரவு 8.15 மணிக்குப் பிறந்தது. இதனையொட்டி இந்து ஆலயங்களில் பரவலாக வழிபாடுகள் நடைபெற்றன. பெருமளவு மக்கள் பங்கேற்றனர். இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலில் இடம்பெற்ற புத்தாண்டுப் பிறப்பு வழிபாட்டில் கலந்துகொண்ட மக்களைப் படத்தில் காணலாம்.

## ஞானசாரருக்கு மன்னிப்பில்லை

விரிவு :- பக். 15

## வாயில் பற்றவைத்த பீடி உயிருக்கு உலைவைத்தது!

### பெற்றோல் மூடியைத் திறந்தபோது விபரீதம்

யாழ்ப்பாணம், ஏப். 14

பீடியை வாயில் பற்ற வைத்துக்கொண்டு பெற்றோல் போத்தல் மூடியைத் திறந்தவர் எரிகாயங்களுடன்

14

## புராதன இந்துக் கோயில் பாகிஸ்தானில் இடித்தழிப்பு

லாகூர், ஏப். 14

பாகிஸ்தானில் புராதனம் மிக்க இந்துக் கோயிலொன்று இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையையொட்டி கைபர் பக்துன்க்வா மாகாணத்தின் லாண்டி கோடல் நகரில் அமைந்துள்ள 'கைபர் கோயிலே' இடிக்கப்பட்டுள்ளது.

14

# சஞ்சீவி

### சிட்னியில்

## வணிக வளாகத்தில் தாறுமாறாக கத்திக்குத்து

### 6 பேர் சாவு: தாக்குதலாளி சுட்டுக்கொலை

15






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறைக்கைதிகளுக்கு ஆன்மிக வழிகாட்டல்!

தடுப்புக்காவலில் இருக்கும்போது தவறான முடிவெடுத்து தமது உயிரை மாய்த்துக் கொள்பவர்களைத் தடுப்பதற்காக ஆற்றுப்படுத்தல் மற்றும் ஆன்மிக ரீதியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என சிறைச்சாலைகள் ஆணையாளரின் பேச்சாளர் காமினி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தடுப்புக்காவலில் இருக்கும்போது தவறான முடிவெடுத்து தமது உயிரை மாய்த்துக் கொள்பவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலத்தில் அதிகரித்து வருகிறது. சிலர் சிறைச்சாலைக்கு வந்த குறுகிய காலத்தினுள்ளேயே தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். ஒவ்வொரு கைதியின் உளநலனிலும் தாங்கள் விசேட கவனம் செலுத்தி வருவதோடு, புதிதாகச் சிறைக்கு வரும் கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும், உளநலச் சிகிச்சை தேவைப்படுவோருக்கு உரிய சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன என்றும் குறிப்பிட்டார். (எ-6)

# வீதி விபத்துகள் அதிகரிப்பு தேசிய வளத்துக்குப் பாதிப்பு

கொழும்பு, ஏப். 14

**இலங்கையில் வீதி விபத்துகளால் ஏற்படும் மொத்த பொருளாதார சேதம் நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 3 முதல் 5 வீதமாக கணிப்பிடப்பட்டுள்ளது என்று மருத்துவ நிபுணர் ருவன் துஷார மதிவலகே தெரிவித்துள்ளார்.**

கடந்த ஆண்டு வீதி விபத்துகளால் 2 ஆயிரத்து 280 பேர் உயிரிழந்துள்ளனர். தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவுகள் பண்டிகைக் காலங்களில் விபத்துக்குள்ளானவர்களால் நிரம்பி வழிகின்றன.

இந்த ஆண்டு ஏப்ரல் இரண்டாம் திகதி வரை மட்டும் 566 பேர் சாலை விபத்துகளில் உயிரிழந்துள்ளனர். சுமார் 2000க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். ஒரு நாடாக நாம் இதற்காகப் பெரும் தொகையைச் செலவிடுகிறோம். உலகவங்கி மற்றும் உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, கார் விபத்துகளால் ஏற்படும் ஆண்டு சேதத்தின் அளவைக் கணக்கிட்டால், சுமார் 730 பில்லியன் ரூபாவாகும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சைச் செலவு, இறந்தவர்களால் குடும்பத்துக்கு ஏற்பட்ட சமூகப் பொருளாதார சேதம், விபத்துகளினால் வாகனங்களுக்கு ஏற்படும் சேதங்கள் என்பவை சமூக பொருளாதாரத்துக்கு மிகப்பெரிய இடராக அமைகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# பட்டாசு விற்பனை உயர்வு

நாட்டில் பட்டாசு விற்பனை 90 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று அகில இலங்கை பட்டாசு உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் தினேஷ்பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது இந்த வருட தமிழ் - சிங்கள புத்தாண்டுக் காலத்தில் பட்டாசு விற்பனை உயர்ந்துள்ளது.

அதேவேளை, பட்டாசு வெடிக்கும்போது அவதானத்துடன் செயற்படுமாறு சுகாதாரத் தரப்பினர் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ச-இ)

# நிர்வாகத் தெரிவுக்கு வருமாறு ஆலயப்பூசகரே அழைத்தாராம்

## சிவசேனை அமைப்பின் தலைவர் சச்சிதானந்தம் இவ்வாறு விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 14

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகக் குழுக்கூட்டத்துக்கு வருமாறு ஆலய நிர்வாகத்தில் இருப்பவர்களே என்னை அழைத்தனர். அதனால்தான் அங்கு சென்றேன் என்று சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலோ சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

கடந்தவாரம் இந்தியாவிலிருந்து நான் திரும்பியவுடன் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் கோயில் பூசகர் மதிமுகராசா என்னைத் தொலைபேசியில் அழைத்தார். வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் வெடுக்குநாறி சிவன் கோயில் சிக்கல்கள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டத்தில் தேர்தல் நடத்திப் புதிய அறங்காவல்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்யக் கோரியதாக என்னிடம் கூறினார். முன்புபோல் வர என்னிடம் வண்டி இல்லையே என்னால் வர முடியாது என்றேன். அரசியலாக தனி நன்மைக்காக, கட்சி ஆதாயங்களுக்காக கோயிலைப் பார்க்கிறார்கள் என்று மதிமுகராசா என்னிடம் கூறினார். கோயிலை வழிபாட்டுக்காக மட்டுமான ஆட்சி அறங்காவல் குழுவை அமைக்க வேண்டும்- என்றார். அந்தப் பகுதியைச் சேர்ந்த அரசியலற்றவர்களை உள்ளடக்கிய ஒரு தீர்வைக் காண்க என அவரிடம் கூறினேன். அத்தோடு அவர் அழைப்பையும் மறந்துவிட்டேன்.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிக்கு புளியங்குளத்தைச் சேர்ந்த தம்பாபிள்ளை என்னைத் தொலைபேசியில் அழைத்தார், 'தயவுசெய்து ஒலுமடுவில் நடக்கும் கூட்டத்துக்கு வாருங்கள். அரசியலாரும், கிறிஸ்தவரும் தங்களைப் புதிய குழுவுக்குள் தேர்ந்தெடுக்க முயல்கிறார்கள். உள்ளூர் மக்கள் அவர்களிடமிருந்து எச்சரிக்கையாக இருக்கிறார்கள்' என்று என்னிடம் கூறினார்.

என் இயலாமையை அவரிடம் சொன்னேன் என்னை ஒலுமடுவுக்குக் கூட்டிச்செல்ல அவர் தனது நண்பரைக் கண்டுபிடித்தார். கூட்டம் நடக்கும் இடத்தை நான் அடைந்தபோது அது நடந்து கொண்டிருந்தது. புதிய குழுவைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள நன்மை, தீமைகள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர். பூசகர் மதிமுகராசா, வேலன் சுவாமி, தமிழ்ச்செல்வன் (குமுச் செயலாளர்) ஆகியோருடன் மேடை வரிசையில் என்னை இருத்தினர். எனக்கு முன்னால் அரங்கில் சுமார் 25 பேர்களைப் பார்த்தேன். அவர்களுள் 6 அல்லது 7 பெண்கள் முதல் வரிசையில் பீட்டர் இளஞ்செழியன், ரவிகரன், தவபாலன் ஆகியோரும் இருந்தனர்.

சற்று நேரத்தில், தவபாலன் என்னைப் புத்த சார்பாளர் எனக் குற்றம் சாட்டத் தொடங்கினார். அதனால் எனக்கு கூட்டத்தில் இடமில்லை என்றார். அடுத்து ஒருவர் பேசினார். 'புத்தர்கள் எங்களை ஆக்கிரமிப்பாளர் என்றார். 'கிறிஸ்தவர்கள் நம்மோடு இருப்பவர்கள். புதிய குழுவில் கிறிஸ்தவர்களையும் சேர்ப்பது நல்லது. குழு உறுப்பினர் அனைவரும் வெடுக்குநாறிமலையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்' என்றார். 'இந்துக் கோவில்களில் பறங்கிக்கு இடமில்லையே' என்றார் செயமாறன். 'இந்தக் கூட்டத்தில் பறங்கியர் கலந்துகொள்ள முடியாதே' என்றார்.

பீட்டர் இளஞ்செழியன் கூட்டத்திலிருந்து எழுந்து வெளியேறினார். தொடர்ந்து ரவிகரனும், தவபாலனும் அரங்க முன் மேடையில் அவருடன் இணைந்தனர். மூவரும் சற்று நேரத்தில் திரும்பினர். முன் வரிசையில் இருந்த அவரவர் நாற்காலிகளில் அமர்ந்தனர்.

தவபாலன் என்னைச் சுட்டிக்காட்டி, 'உங்களை எவரும் அழைக்கவில்லை. ஏன் வந்தீர்கள்? உங்கள் வேட்டியை புத்த மதகுருவிடம் கொடுத்தவரல்லவா? உங்களுக்கு வெட்கமில்லையா? புத்தர்கள் எங்கள் ஆக்கிரமிப்பாளர்களாச்சே?, நீங்கள் புத்த ஆதரவாளர், நீங்கள் அரசு சார்பாளர்! நீங்கள் கூட்டத்தில் பங்கேற்கமுடியாது. வெளியே செல்லுங்கள்' என்றார்.

என் பக்கத்தில் அமர்ந்திருந்த பூசகரிடம், 'நீங்கள் என்னை அழைத்தீர்கள், நான் இங்கே இருக்கிறேன்' என்றேன். இதைப் பூசகர் தவபாலனிடம் ஒப்பினார். மூவரும் முதலில் வெளியேறினர். வேலன் சுவாமி தொடர்ந்தார். அடுத்தடுத்துப் பங்கேற்பாளர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறத் தொடங்கினர் என்றுள்ளது. (ம-66)



மகளிர்தின நிகழ்வு

வலிகாமம் கிழக்கு, கோப்பாய்ப் பிரதேச செயலகத்தால் சர்வதேச மகளிர்தின விழா, பிரதேச செயலாளர் ச. சிவஸ்ரீ தலைமையில், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், தேவைநாடும் மகளிர் அமைப்பு, இருபாலை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகம், யாழ். குடிசார் அமைப்புகளின் சம்மேளனம் போன்ற நிறுவனங்கள் நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியிருந்தன. நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ். தேசிய கல்வியியற்கல்லூரிப் பணிப்பாளர் திருமதி சி. குகநேசன், சிறப்பு விருந்தினர்களாக தேவைநாடும் மகளிர் அமைப்பு நிறுவன முகாமையாளர் திருமதி க. சித்ரா, இருபாலை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழக இணைப்பாளர் திருமதி ச. சிந்துஜா, யாழ். மாவட்ட குடிசார் அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் திருமதி. ம.தமிழ்ச்செல்வி ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-159)

## கோணேச்சரம் இடித்தழிப்பு

# உயிர்த்தியாகம் செய்தோரை நினைவேந்தும் வழிபாடுகள்

திருகோணமலை ஏப்.14

திருக்கோணேச்சரம் அந்நியர்களால் இடித்தழிக்கப்பட்டபோது உயிர்த்தியாகம் செய்த தமிழ்ப் பெருமக்களை நினைவேந்தும் வகையில் இறை வழிபாடுகள் திருக்கோணேச்சரத்தில் தென்கயிலை ஆதீன குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் திருமுன்னிலை வகிக்க இன்று மு.ப. 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

கோணேசர் திருப்பதிகம் ஓதி வழிபாடுகளை நிறைவுசெய்த பின் தொடர்ந்து 400ஆவது நினைவேந்தல் ஆண்டு நிகழ்வுகளை எதிர்வரும் ஆண்டு முழுவதும் நாடளாவிய ரீதியில் முன்னெடுத்தல் தொடர்பான வழி வரைபடக் கலந்துரையாடல், அடையாள ஆவண நூல்நிலைய அங்குரார்ப்பணம், அறநெறி மாணவருக்கு நூல்கள் வழங்கல், மகேஸ்வர பூசை என்பன தென்கயிலை ஆதீனத்தில் அகத்தியர் அடிகளார் தலைமையில் இடம்பெறும். இந்த வரலாற்று முக்கியத்துவம்மிக்க பண்டைய பெரும் தமிழர் அடையாள சிவாலயத்தில் நடைபெறும் எம் முன்னோரின் தியாகத்தை நினைவேந்தும் வழிபாட்டு நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-125)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, யாழ்.முயற்சியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில், உள்ளூர் சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்கள் அடங்கிய விற்பனைச் சந்தை நிகழ்வு, நல்லூர் சங்கிலியன் பூங்கா வளாகத்தில் கடந்த வியாழக்கிழமையும், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமையும் நடைபெற்றது. தொடர்ந்து, நேற்று சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை நிகழ்வு இடம்பெற்றது. (ப-66-27)

## வலி. கிழக்கில் திடீர் சோதனை

புதுவருடத்தை முன்னிட்டு வலி.கிழக்குப் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். உணவகங்களில் பணியாற்றுவோர் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியதுடன் வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்றும் கண்காணித்து வருகின்றனர். (ச-17)




## உணவகங்கள் மீது திடீர்ச் சோதனை

கொடிகாமம், ஏப். 14

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவினரால், கொடிகாமம் நகரப் பகுதியிலுள்ள, உணவு கையாளும் நிலையங்கள் மீது திடீர்ப் பரிசோதனை நடவடிக்கை கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையைச் சேர்ந்த 5 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது மூன்று நிலையங்களில் காலாவதியான உணவுப் பொருள்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு உடனடியாக அழிக்கப்பட்டன. மேலும், வியாபார நிலையங்களில் இனங் காணப்பட்ட குறைபாடுகளை காலதாமதமின்றி உடனடியாக சீர்செய்யுமாறு அவற்றின் உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர். (ஒ-59)



## குளத்தைப் புனரமையுங்கள்

முல்லைத்தீவு, ஏப்.14

அம்பலப்பெருமாள்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஆனைத்தலைமோட்டைக் குளம் சீரற்றுக் காணப்படுவதாக அந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். 2010 ஆம் ஆண்டிலிருந்து குளத்தைப் புனரமைப்பதற்கான கோரிக்கை மக்களால் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் குளத்தினை நீர்ப்பாசனத் திணைக்களத்தினர், கமநல சேவை உத்தியோகத்தர்கள், காணி உத்தியோகத்தர்கள் போன்றோர் பார்வையிட்டுள்ளனர். நீர்ப்பாசனத் திணைக்களம் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற முன்மொழிவை அறிக்கைகளாக பல தரப்புகளுக்கும் உலக வங்கி கையளித்துள்ளது. ஆனால் குள வேலைகள் முன்னெடுக்கப்படவில்லை. வனவளத்திணைக்களத்துக்குரிய பகுதியில் குளம் அமைந்துள்ளதால், புனரமைப்பு செய்வதில் தடைகள் காணப்படுகின்றன. ஆனைத்தலை மோட்டைக் குளத்தைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் 200 ஏக்கருக்கு மேலான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். எனவே இது குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-13)

## விவசாயத்தில் 'ட்ரோன்' அறிமுகம்

யாழ்ப்பாணம், ஏப்.14

ட்ரோன்களைப் பாவித்து விவசாயத்தை மேம்படுத்துவதற்கு விவசாய அமைச்சு திட்டமிட்டுள்ளது.

முதற்கட்டமாக இலங்கை வங்கியின் நிதியுதவியுடன் 100 ட்ரோன்கள் விவசாயநடவடிக்கைகளுக்கு பயன் படுத்தப்படவுள்ளன. விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மண்ணின்தன்மை, காலநிலை, பயிர்களில் ஏற்படும் தாக்கங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு ட்ரோன் மூலம் தீர்வு காணமுடியும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. விவசாயிகளுக்கு ட்ரோன் கொள்வனவு செய்வதற்கு கடன் வசதியையும் செய்து கொடுக்க இலங்கை வங்கி முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

## ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை நடைமுறைப்படுத்துக

அக்கராயன் மத்தி, கெங்காதரன் குடியிருப்பு மற்றும் அக்கராயன் கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் நீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் விரைவில் எடுக்கவேண்டும் என அந்தப் பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமங்கள் கடல் மட்டத்தில் இருந்து 115 அடி உயரத்தில் காணப்படுவதால் வறட்சியான காலங்களில் கிணறுகளில் விரைவாக நீர் வற்றுவதோடு, நீர் நெருக்கடியும் அதிகரித்துவருகிறது. எனவே ஏற்று நீர்ப்பாசனத்தை நடைமுறைப்படுத்துவதன்மூலம் பயிர்ச்செய்கைகளில் விவசாயிகள் ஈடுபடுவதோடு, நிலத்தடி நீரையும் பாதுகாக்கமுடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-13)

## விபத்தில் காயம்

பரந்தன் -முல்லை வீதியில் நேற்றுக்காலை பரந்தனை அண்மித்து இடம் பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். முல்லைத்தீவிலிருந்து பரந்தன் நோக்கி வந்த டிப்பர் வாகனம் எதிரே பயணித்த சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. அதன் போதே குறித்த நபர் காயமடைந்தார். (ஒ-113)

## அதிரடிப்படை மீது தாக்குதல்; 17 வயது இளைஞன் கைது

குற்றச்செயல் ஒன்றுக்குத் தயாராகிக் கொண்டிருந்த நபர்களை கைதுசெய்ய முயன்ற விசேட அதிரடிப்படை அதிகாரி மீது கொலைவெறித் தாக்குதல் நடத்த முயன்ற 17 வயது இளைஞனொருவர் மன்னாரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் மன்னார் - பெரிய கரிசல் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்றது.

குற்றச் செயல் ஒன்றைப் புரிவதற்காக தயார் நிலையில் இருந்த நபர் ஒருவரைக் கைது செய்வதற்காக விசேட அதிரடிப்படையினர் மன்னார் - பெரியகரிசல் பிரதேசத்தில் திடீர் சுற்றிவளைப்பு நடத்தியுள்ளனர். சந்தேக நபரிடமிருந்து கூரியவாள் மூன்று கத்திகள் மற்றும் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. அதனையடுத்து 40 வயதான சந்தேகநபரும் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்ட நபரின் உறவினரான 17 வயது இளைஞன் ஒருவன் கூரிய கத்தியால் விசேட அதிரடிப்படையினர் மீது கொலைவெறித் தாக்குதலை நடத்த முயன்றதையடுத்து அவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது விசேட அதிரடிப்படை வீரர் ஒருவர் காயமடைந்து மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர் என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலைத் தாக்குவதற்கு தயார் நிலையில் ஈரான்!

## மத்திய கிழக்கில் போர்ப்பதற்றம்



**தெக்ரோன், ஏப். 14**

**தூதரகத்தின் மீதான தாக்குதலுக்குப் பதிலடியாக, இஸ்ரேலைத் தாக்குவதற்கான முன்னெடுப்புகளை ஈரான் தீவிரப்படுத்தியுள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.**

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் உள்ள ஈரானியத் தூதரகத்துடன் இணைந்த கட்டடத்தின் மீது இஸ்ரேல் கடந்தவாரம் வான் தாக்குதலை நடத்தியிருந்தது. இந்தத் தாக்குதலில் ஈரானின் இரண்டாம் நிலை போர்த் தந்திரி கொல்லப்பட்டார். அத்துடன் ஏழு துணைத் தளபதிகளும் கொல்லப்பட்டனர்.

தூதரகத்தின் மீதான தாக்குதல் என்பது சர்வதேச நியமங்களின் படி அந்த நாட்டின் மீதான தாக்குதலாகவே கருதப்படும். ஆதலால், இந்தத் தாக்குதலை தன் மீதான தாக்குதலாக அறிவித்த ஈரான் இஸ்ரேலுக்கு எதிராகத் தீவிரமான இராணுவ நடவடிக்கையை எடுப்பதற்குத் தயாராகியுள்ளது.

கடந்த இரண்டு நாள்களாகவே இந்தப் பதற்றம் மத்திய கிழக்கில் தீவிரமாக ஏற்பட்டுள்ள நிலையில், தற்போது அமெரிக்கா தனது துருப்புகளை இஸ்ரேலை நோக்கி நகர்த்தியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. 'இஸ்ரேலைப் பாதுகாப்பதற்கு முடியுமான அத்தனை நடவடிக்கைகளையும் எடுப்போம்' என்று அமெரிக்க அதிபர் பைடன் அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட ட்ரோன்களையும், ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏவுகணைகளையும் ஈரான் தயார்நிலையில் வைத்துள்ளது என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன. (ம)

## விவசாயிகள் வளம்பெற மோடி வேண்டும்

புதுடில்லி, ஏப். 14

விவசாயிகளின் வாழ்வு மலர வேண்டுமெனில் மோடி மீண்டும் பிரதமராகப் பொறுப்பேற்க வேண்டும் என்று இந்தியாவின் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தேர்தல் பரப்புரைகள் தற்போது தீவிரம் பெற்றுள்ளன. தமிழகத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையொன்றில் நிர்மலா சீதாராமனும் கலந்துகொண்டார். அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம)



## இந்திய விமானப்படையை பலப்படுத்தத் திட்டம்!

புதுடில்லி, ஏப். 14

இந்திய விமானப் படையைப் பலப்படுத்தும் நோக்கில் 65 ஆயிரம் கோடி ரூபா செலவில் 97 தேஜஸ் போர் விமானங்களை வாங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய விமானப் படையில் மிக் 21, மிக் 23, மிக் 27 ரகங்களைச் சேர்ந்த பழைய போர் விமானங்களுக்குப் பதிலாக புதிய போர் விமானங்களைச் சேர்க்க மத்திய பாதுகாப்புத் துறை முடிவுசெய்துள்ளது. இதன் ஒரு பகுதியாகவே 65 ஆயிரம் கோடி ரூபா செலவில் 97 தேஜஸ் போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் போர் விமானங்களில் டிஜிற்றல் ரேடார், வான் இலக்குகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகள், ஜாமர் உள்ளிட்ட அதிநவீன கருவிகள், ஆயுதங்கள் இடம்பெற்றிருக்கும். இதன் சோதனை ஓட்டம் அண்மையில் பெங்களூரில் வெற்றிகரமாக நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பெருமை உண்டாகும். சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

**இடபம்:** அனுகூலமான நாள். முயற்சிகள் சாதகமாகும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். அனுகூலம் உண்டாகும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். ஆதாயமும் கிடைக்கும். பணவரவு மகிழ்ச்சி தரும். விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருப்பது மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அவசியம் ஏற்பட்டால் தவிர வெளியில் செல்வதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பப் பெரியவர்களுடன் கலந்து பேசி முக்கியமான முடிவு எடுப்பீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வார்த்தைகளில் நிதானம் தேவை.

**துலாம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்பு நீங்கும். சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**விருச்சிகம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுப்பு களைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பெருமை உண்டாகும். சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். நீண்டநாள்களாக கேட்டுக்கொண்டிருந்ததை வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றி நிம்மதி பெறுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிளை தொடங்குவது நல்லது. உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். பிள்ளைகள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி சிலருக்கு இளைய சகோதரரால் சங்கடங்கள் ஏற்படும். உடல்நலனில் கவனம் செலுத்தவும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் மேலோங்கும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்கள் தொடர்பு கொண்டு பேசுவது மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவதாக இருக்கும். விநாயகரை வழிபட நன்மை கிடைக்கும்.

## இரும்புக் கவசம் அமைத்து பிலிப்பைன்ஸைக் காப்போம்

வொஷிங்டன், ஏப். 14

இந்தோ- பசுபிக் கடற்பகுதியில் சீனாவின் ஆக்கிரமிப்பைத் தடுக்க, இரும்புக்கவசம் அமைத்து ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸைப் பாதுகாப்போம் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

வெள்ளை மாளிகையில் பிலிப்பைன்ஸின் ஜனாதிபதி ஜூனியர் பெர்டினன்ட் மார்க்கோஸ் மற்றும் ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா ஆகியோரை வரவேற்று, ஜனாதிபதி, ஜோ பைடன் நேற்றுமுன்தினம் முத்தரப்பு பேச்சில் ஈடுபட்டார்.

இதன்போதே சீனாவின் ஆக்கிரமிப்பைத் தடுக்க, இரும்புக் கவசம் அமைத்து ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸை பாதுகாப்போம் என பைடன் தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஆக்கிரமிப்பை எதிர்கொள்வதற்காக பிலிப்பைன்ஸுக்கு நீர்மூழ்கிக் கப்பல்களை வழங்க அமெரிக்கா அண்மையில் சம்மதம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



## உக்ரைனின் மின்கட்டமைப்பு ரஷ்யாவால் முற்றாகத் தகர்ப்பு!

### 30 இலட்சம் பேர் பாதிக்கப்படுவர்

கீவ், ஏப். 14

உக்ரைனின் தலைநகர் கீவ், செர்காசி, ஜைடோமிர் நகரங்களுக்கு மின்சாரம் வழங்கி வந்த டிரைபில்ஸ்கா என்ற மிகப்பெரிய மின்சார உற்பத்தி நிலையத்தை ரஷ்யா தாக்குதல் நடத்தி அழித்துள்ளது.

மின்சார உற்பத்தி நிலையம் எரிந்து ஒரு குறிப்பிட்ட [illegible] தாகவும், அது பயங்கரமானது எனவும் ஆலையை நிர்வகிக்கும் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது கடந்த இரண்டு வாரங்களாக உக்ரைன் தாக்குதல் நடத்திவந்தது. இதற்குப் பதிலடியாகவே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று மொஸ்கோ அறிவித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மலரும் இப்புத்தாண்டு
அபிலாஷைகள் நிறைவேறிடும் நல்லாசிகள் கிடைத்திடும்
புத்தாண்டாக அமைய வாழ்த்துகின்றோம்.

இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!



COMMERCIAL BANK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### முல்லைத்தீவில்
## புதுவருட விளையாட்டு நிகழ்வில் பண்டார தென்னக்கோன் பங்கேற்பு

முல்லைத்தீவு, ஏப். 14

தமிழ்-சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில் வன்னிப் படைத்தலைமையகம், 59 ஆவது படையணி, 64 ஆவது படையணி மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் என்பன இணைந்து, மாமூலை டைமன் விளையாட்டு மைதானத்தில், பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தியிருந்தன. நிகழ்வில் பிரதம அதிதியாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ப்ரமித்த பண்டார தென்னக்கோன் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், மாவட்ட மேலதிகச் செயலர் சி.ஜெயகாந்த், வன்னி படைத்தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தினேஷ் நாணயக்கார, கரைதுறைப்பற்று பிரதேச செயலர் திருமதி ம.உமாமகள், 59 ஆவது படையணித் தளபதி, 64 ஆவது படையணித் தளபதி, மதகுருமார்கள், இராணுவ அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-113 -35)



## வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது வட்டக்கச்சி லக்கிஸ்ரார் கழகம்

கிளிநொச்சி, ஏப். 14

உருத்திரபுரம் விளையாட்டுக்கழகமும், சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய நல்லம்மா வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி, உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகமும், கிளிநொச்சி ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. இதில் 1:0 என்ற கோல் கணக்கில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம், கிளிநொச்சி ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (ப-113)

## கூட்டுறவு மேம்பாடு ஒருநாள் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஏப். 14

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைமட்ட பணியாளர்களுக்கான கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாடு சம்பந்தமான கருத்தமர்வு கடந்த புதன்கிழமை சமாச மண்டபத்தில் இடம்பெற்றது.

வடக்கு கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்த ஒருநாள் கருத்தமர்வில் 60க்கும் மேற்பட்ட சங்கங்களின் முகாமைமட்ட பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் கே.கமலநாதன் கருத்தமர்வில் வளவாளராகக் கலந்துகொண்டார். (ச-17)



## இறுதிக்கிரியை செய்வதில் இடர்

மன்னார், ஏப்.13

மன்னார் பிரதேச செயலர் பிரிவிலுள்ள நாகதாழ்வு கிராமத்தில் நிரந்தரமான பொதுமயானம் இன்றி மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

போர்காலத்துக்கு முன்னர், மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த பொது மயானம், வனஜீவராசிகள் திணைக்களத்தினின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் அந்தப்பகுதி மக்கள் ஆங்காங்கே சில இடங்களில் இறந்தவர்களின் இறுதிக்கிரியைகளைச் செய்து வருகின்றனர். நிரந்தரமான பொதுமயானத்தை வழங்குவதன்மூலம், தகனக் கிரியைகளைச் சரிவரச்செய்துகொள்ள முடிவதோடு, மழைகாலங்களிலும் தடையின்றி இறுதிக்கிரியைகளைச் செய்ய முடியும் என்று மக்களின் கோரிக்கைவிடுத்துள்ளனர். (ஓ-56)




## உலக தாய்மொழி தினம்

யாழ்ப்பாணம், ஏப்.14

'எங்கள் இனத்தின் அடையாளம் தமிழ்' எனும்தொனிப் பொருளிலான தாய்மொழி தின நிகழ்வு வெண்கரம் படிப்பக மாணவி அபிநயா தலைமையில், வெண்கரம் தலைமை அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. வெண்கரம் பிரதான செயற்பாட்டாளரும், ஆசானுமாகிய திருமதி நி.சுமித்ராவின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற நிகழ்வுக்கு எழுத்தாளர் விவேகானந்தனூர் சதீஷ் நிதியை வழங்கியிருந்தார். நிகழ்வில் வெண்கரம் பிரதான செயற்பாட்டாளர் மு.கோமகன், அராலி மற்றும் சுழிபுரத்தைச் சேர்ந்த வெண்கரம் படிப்பக மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஓ- 27)



தென்னையில் ஏற்படும் 'வெள்ளை ஈ தாக்கம்' தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு, தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பண்ணைத் திட்டமிடல் உத்தியோகத்தர்களால், சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (ப-66)

## காற்றால் முறிந்த மரம்; மின்சாரமும் தடை

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ்ப்பாணத்தில் வீசிய பலத்த காற்றுடன்கூடிய மழை காரணமாக பனைமரமொன்று முறிந்து வீழ்ந்ததில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாகக் கடும் வெப்ப நிலையுடன் கூடிய காலநிலை நிலவி வந்த நிலையில் நேற்று அதிகாலை பலத்த காற்றுடன் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

பலத்த காற்று வீசிய சமயம் சங்கானை 7 ஆம் கட்டைப் பகுதியிலுள்ள தனியார் காணியொன்றில் நின்ற பனைமரம் திடீரென முறிந்து வீழ்ந்துள்ளது. இதனால், இரு மின்கம்பங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் அப்பகுதியில் மின்சாரமும் தடைப்பட்டுள்ளது.

அதேவேளை, வீதியில் எவரும் பயணிக்காததால் பெரும் இடரும் தவிர்க்கப்பட்டுள்ளது. (ஓ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விரோதம் தீர்க்கட்டும் குரோதி!


புத்தாண்டு மலர்ந்திருக்கின்றது. அதன் பெயர் குரோதி. பல்வேறுபட்ட சவால்கள், நெருக்குவாரங்கள், பொருளாதார நெருக்கடிகள், அரசியற் பிரச்சினைகள் நிறைந்ததாக - 'காலங்கள் மாறினாலும் காட்சிகள் மாறுவதில்லை' என்பதாகத்தான் - 'குரோதி' புத்தாண்டையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற போர், 2009ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் தமிழர் தாயகம் எதிர்கொண்டிருக்கும் ஆக்கிரமிப்பும், அநீதித் தனங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. காணாமற்போனவர்களின் விவகாரம், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, சிங்கள – பௌத்த ஆக்கிரமிப்பு என தசாப்தங்களாக நிலவும் பிரச்சினைகள் நாளுக்குநாள் வீரியம்பெற்று வருகின்றனவேயன்றி எந்தவொரு விடயங்களிலும் முன்னேற்றம் ஏற்பட்டதாகவில்லை. இன்று கிடைக்கும், நாளைகிடைக்கும், இந்தத்தீபாவளிக்குள் கிடைக்கும், எதிர்வரும் சுதந்திரதினத்துக்குள் கிடைக்கும் என்று இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து வழங்கப்பட்ட வாக்குறுதிகளும், ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கைகளும் காலப்போக்கில், 'பெருங்கடலில் வீசப்பட்ட கல்' போன்றாகிவிட்டன. பார்வைப் புலத்திலிருந்து கொஞ்சம்கொஞ்சமாக மறைந்து சென்ற 'நம்பிக்கை' என்னும் அந்தக் கல், இப்போது காணாமலேயே போய்விட்டது. தமிழர்களின் அரசியல் வேணவாவை பொருளாதார இடர்பாடுகளை, நிவர்த்தித்து நிறைவேற்றக்கூடிய ஆரம்பப்புள்ளியோ குறைந்த பட்சம் அதற்குரிய நம்பிக்கைக் கீற்றொளியோ இப்போது கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் இல்லவேயில்லை. இவ்வாறான வெற்று மனோநிலையில் – நம்பிக்கையற்ற தன்மையில்தான் புத்தாண்டை நாம் வரவேற்றிருக்கின்றோம்.

ஆனால், 2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக இருப்பது தமிழர்களுக்கு ஒரு சாதகத்தனம்தான். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பேச்சுகள் தற்போது பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதித் தேர்தலின் வேட்பாளர்கள் தமிழர்களின் வாக்குகளைக் கவர்ந்திழுப்பதற்காக இப்போது தமிழர் பகுதிகளை நோக்கி பறந்துவரத் தலைப்பட்டுள்ளனர். மறுமுனையில், தமிழர்கள் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற கருத்தாடல்களும் வலுப்பெற்றிருக்கின்றன. தமிழர்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டாலும் சரி அல்லாவிட்டாலும்சரி இந்தத் தேர்தல்காலம் பரந்துபட்ட பேரம்பேசலைதமிழ்த்தேசியத்தலைவர்களுக்கு வழங்கவே செய்யும். அதை அவர்கள் கனகச்சிதமாக ஓரணியில் நின்று பயன்படுத்தவேண்டும்.

கட்சிக்கொடிகளின் கீழ் பிளவுபட்டு நின்ற எம் தமிழ்த் தேசியக் கட்சிகளின் அரசியல், இவ்வருடமாவது தேர்தல் காலங்களின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு ஒன்றிணைந்து ஓரணியில் பயணிக்க வேண்டும். தமிழ்த் தலைவர்கள் தீர்க்கமாகவும் தெளிந்த அறிவுடனும் செயற்பட வேண்டியது காலத்தின் தேவை. ஆக, தமிழ்த் தேசியக்கட்சிகளின் தலைவர்கள் வழக்கமான அரசியல் பகடையாட்டங்களுக்கு எடுபடாமல், மக்கள் மயப்பட்ட சிந்தனைகளை வெளிப்படுத்தி – மிகக்காத்திரமான முடிவுகளை எடுக்கவும், இலங்கைத்தீவு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்குவாரங்கள் விட்டகலவும் குரோதி வருடம் இடமளிக்கவேண்டும். மலர்ந்திருக்கும் 'குரோதி' வருடம், இனங்களுக்கிடையிலான விரோதத்தையும் நீக்கி 'இலங்கையர்களாக' சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கிப் பயணப்பட வரம் செய்யட்டும்.






# முழுவீச்சில் நடக்கும் தேர்தல் பணிகள்!

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு



**கொழும்பு, ஏப்.14**

**தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் உத்தியோகபூர்வமாக அறிவிக்க உள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க உறுதிப்படுத்தியுள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான முன்னாயத்த நடவடிக்கையாக தேர்தல் பதிவேடுகள் தயாரித்தல் உள்ளிட்ட விடயங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் தேர்தலுக்கு தயார்ப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேர்தல் பணிகளை மேற்கொள்ள விரும்பும் அரசு ஊழியர்களின் பட்டியல் ஏற்கனவே தயார்ப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதிலிருந்து தேவையான பணியாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## ஜோர்ஜியா மீளத் தெரிவு

கொழும்பு, ஏப்.14

சர்வதேச நாணயநிதியத்தின்நிறைவேற்றுப் பணிப்பாளராக எதிர்வரும் 5 வருடங்களுக்கு கிரிஸ்டலினா ஜோர்ஜியா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின்நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலேயே அவர் நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு கிரிஸ்டலினா ஜோர்ஜியா சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராகப் பணியாற்றுவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-இ)

## முறைப்பாட்டுக்கு புதிய இலக்கம்!

கொழும்பு, ஏப்.14

புத்தாண்டு காலத்தில் போக்குவரத்து விதிகளை மீறும் பஸ் சாரதிகள் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைப்பதற்காக '1955' என்ற அவசர தொலைபேசி இலக்கம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## கோப்பாயில் விபத்து

யாழ்பாணம், ஏப். 14

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான வீதியின் கோப்பாய் நாவலர் பாடசாலையருகே நேற்று விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஹைஏஸ் ரக வாகனமொன்று கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டுவிலகி, அருகிலிருந்த மதிலை உடைத்துக்கொண்டு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. விபத்துத் தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)

## புத்தாண்டை முன்னிட்டு 10 கைதிகள் விடுதலை

புத்தாண்டை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் இருந்து பத்து சிறைக்கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர். சிறு குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். நாடுபூராகவும் புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பின் கீழ் நூற்றுக் கணக்கான சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடத்தக்கது. (ம-110-18)

### நாளை

15.04.2024

**திங்கட்கிழமை**

**சித்திரை 02**

சுபநேரம்: 12.04 - 01.34

ராகுகாலம் : 07.34 - 09.04

### நாளொரு நல்வார்த்தை

ஒரு முள்
குத்திய அனுபவம்
காடளவு
எச்சரிக்கைக்குச் சமம்.

– லோயஸ் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடுந்தீவு பிரதேச செயலக சமுர்த்தி அலகினரும், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அலகினரும் இணைந்து நடத்திய சிறுதொழில் முயற்சியாளர்களின் சமுர்த்தி அபிமானி உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தலும் விற்பனைச் சந்தையும் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. (எ-9)




புனித ரமழான் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் வசிக்கும் 150 முஸ்லிம் குடும்பங்களுக்கு யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (எ-66)




மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வும், மைதான மதில் கட்டுமான திறப்புவிழாவும் பாடசாலை மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (எ-159)



வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் கணினிப் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (எ-13)

புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் திடல் தொழுகையும் குத்பா பிரசங்கமும் மன்னார் மாவட்டம் சயீட் சிட்டி பொது மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (எ-56)





சாவகச்சேரி சக்தி அம்மன் தமிழ் வித்தியாலயத்தில் கற்கும் இரு மாணவர்களுக்கு, மேசை மற்றும் கதிரைகள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. புலம்பெயர் நாட்டில் வதியும் யாழ். குரும்பசிட்டியைச் சேர்ந்த நலன்விரும்பியின் நிதி அனுசரணையில் இவை வழங்கப்பட்டன. (எ-9)




பளை, முகமாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அதிபர் இராமேஸ்வரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வர்த்தக நிலையங்கள் திறப்பு

மன்னார், ஏப்.14

தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தும் நோக்கில், செங்கலடி இலுப்படிச்சேனைப்பகுதியில் புதிய வர்த்தக நிலையங்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறக்கப்பட்டன.

22 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த வர்த்தக நிலையங்கள் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (எ-213)

## விமான நிலையத்தை தரமுயர்த்த 2 பில்லியன்

கொழும்பு, ஏப்.14


ஹிங்குராங்கொட விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்தப்படவுள்ளது. இதற்கென 2024ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 2 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 46 மீற்றர் அகலமான 2,287 மீற்றர் ஓடுபாதை அமைக்கப்படவுள்ளது. போயிங் 737 விமானங்களும் 320 எயர் பஸ்களும் இங்கு தரையிறங்கமுடியும். இந்தத் திட்டத்துக்கு மொத்தமாக 17 பில்லியன் ரூபா தேவை என விமான, கப்பல், துறைமுகங்கள் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் பணிப்பின் பிரகாரமே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. (எ-6)

## சித்த ஆயுள்வேத சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.14

காரைநகர் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட வடக்கு உபஅலுவலகம், வேம்படி, காரைநகர் எனும் முகவரியில் இயங்கிய இலவச சித்த ஆயுள்வேத மருத்துவமனையின் சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று காரைநகர் பிரதேசசபையின் செயலாளர் கி.விஜயேஸ்வரன் தெரிவித்தார். வாரந்தோறும் செவ்வாய் மற்றும் புதன் ஆகிய தினங்களில் காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை பொதுமக்களுக்கான மருத்துவசேவை இடம்பெறுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-66)



யாழ்.மீசாலை சோலை அம்மனுக்கு 3 ஆவது பங்குனி உத்தர குளிர்த்தி உற்சவமும், நீர்ச்சோறு வழங்கலும் அண்மையில் இடம்பெற்றன. (எ-27)



கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 105 ஆவது ஸ்தாபக தினமும் பரிசளிப்பு விழாவும் அதிபர் ந. கண்ணதாசன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றன. (எ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைமையில் சாராயம் பெண் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.14

ஊரெழுப் பகுதியில் 36 வயதுடைய பெண்ணொருவர், சுன்னாகம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். 75 சாராயப் போத்தல்களை உடைமையில் வைத்திருந்த குற்றத்துக்காக அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதோடு, அவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-27)



## தவறவிடப்பட்டது

மல்லாகம் சந்திக்கும் யாழ்ப்பாண பஸ் நிலையத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் நகையும் பணமும் தவறவிடப்பட்டுள்ளன.
கண்டெடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(CS54725) J-1

077 047 4708, 074 098 8423

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

- Pleasure பிளசர் மோட்டார் சைக்கிளும் XG ..
- Discover டிஸ்கவர் மோட்டார் சைக்கிளும் XO..

விற்பனைக்கு உண்டு.

076 112 4145

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி சந்தியில் அலுவலகங்கள், வியாபார நிறுவனங்கள் நடத்துவதற்கு ஏற்ற, வாகன தரிப்பிட வசதியுடனான வீடு வாடகைக்குண்டு.

(CS54719) N-1

070 575 6560 / 077 608 6209

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 . 01 . 1950 | 11 . 04 . 2024 |



### மனோகரி தியாகராஜா

ஏழாலை தெற்கு, சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரி தியாகராஜா கடந்த 11.04.2024 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்வபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற கந்தசாமி - விசாலாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தியாகராஜா அவர்களின் அன்பு மனைவியும், லோகேஸ்வரன், சிவபதி, கருணாநிதி, மங்களநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சகுந்தலாதேவி, காலஞ்சென்ற சந்திரபாலன் மற்றும் அதிரூபராணி, மனோகரன் ஆகியோரின் மைத்துனியும், நித்தியா (லண்டன்), சுஜீந்திரன் (கிளிநொச்சி), கஜேந்திரன் (முகாமையாளர், செங்கடகல பினான்ஸ்), மனோஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்,முகுந்தன்,செல்வரஜினி, சோபிகா ( D/O - வேலணை பிரதேசசபை), ரஜிகரன், யாழினி, காண்டீபன், பவித்திரா, குஜன், செந்தூரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அஜலினி, கௌரிசங்கர், அஞ்சனா, சௌந்தரி, அபிராம்சங்கர், ஹரிராம் சங்கர், அகிலன் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், அஜித், சுவாதி, பிருந்தன், அனுஶ்ரீ, தானியா, நந்துஜா, அக்ஷரா, கபின்யா, அஷ்ணு, கவின், இமையன், வைஷ்ணவி, ஜெயானி, அவினேஷ், அஸ்மிதா, அகஸ்ரியா, ஆதிரன், ருத்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்
TP: 077 958 5835
076 820 5230

சூராவத்தை,
சுன்னாகம்.

(cs.54721) (N-1)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24 . 04 . 1953 | 11 . 04 . 2024 |



### கந்தையா ஸ்ரீபாஸ்கரன்

யாழ்ப்பாணம் சங்கரத்தை வட்டுக்கோட்டையை பிறப்பிடமாக கொண்டவரும் கொழும்பு இல.07 3/2, கொலிங்வூட் இடம் வெள்ளவத்தையை வசிப்பிடமாக கொண்டவரும், ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளருமான கந்தையா ஸ்ரீபாஸ்கரன் அவர்கள் கடந்த (11.04.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற குலசேகரம் - பூங்காவனம் தம்பதியரின் மருமகனும், செல்வநாயகியின் அன்புக் கணவரும், தனுஷன், தர்ஷனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்வேஷ்வரி, ரகுமார், வசந்தவேணி, சுகுணராணி, கலைவாணி, சிவகுமார் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2024) திங்கட்கிழமை காலை 8.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இடம்பெறும் .


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செல்வநாயகி (மனைவி) - 077 483 0008
தனுஷன் (மகன்) - 076 036 2495

(CS 54728) A-1

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 . 05 . 1989 | 12 . 04 . 2024 |



### ஏரம்பமூர்த்தி பார்த்தீபன்

யாழ்.புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பமூர்த்தி பார்த்தீபன் அவர்கள் 12-04-2024 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஏரம்பமூர்த்தி - சறோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகனும், வாசுகி, சுபாஸ்கரன், பிரபாகரன், காண்டீபன், தேவகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரூபகலா, யசோதா, கயல்நிலா, சுதாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிதிலன், அகிலேஷ், இலக்கியா, புகழ்நிலா, அச்சுதன், அகல்யா, திவ்யன், சைந்தவி, மேகவி, மைவிழி ஆகியோரின் சித்தப்பாவும், பிரவீன், மெலானி, சதுர்யா, விவேகா, சேரன் ஆகியோரின் `அன்பு மாமனாரும், சச்சிதானந்தம் - தயாநிதி, சிவதாசபிள்ளை - கமலாஜினி காலஞ்சென்றவர்களான கோடிலிங்கப்பிள்ளை, தங்கவேற்பிள்ளை மற்றும் இந்திராணிதேவி, சிவாஜி - செல்வராணி, ஆறுமுகம் - புஸ்பவதி, இராமலிங்கம் - கருணாவதி, மகாதேவன் - பவானி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற திருலோகநாதன் மற்றும் புஷ்பராணி காலஞ்சென்ற அருணகிரிநாதன் மற்றும் சுந்தராம்பாள், சர்வலோகநாதன் - செல்வகலா, வைத்தீஸ்வரன் - யோகராணி , சசிதேவி - திருச்செல்வம், காஞ்சனமாலை - நாகேந்திரம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2024) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் இன்பம் மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
குடும்பத்தினர்.
077 044 3372

(CS/54731) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீரிஸ் மீது ஒழுக்காற்று



நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க சிறிலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள் ளது. கட்சியின் நிறைவேற்றுச் சபையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளது என்று கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரி வித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் போது ஏனைய கட்சிக ளுடன் உடன்படிக்கையில் ஈடுபடின் ஒழுக் காற்று நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் உண்டு என்றும் சாகர காரியவசம் குறிப்பிட்டார். (ச-இ)

# நீலக்கொடி சான்றிதழ் இல்லாத இலங்கை!

கொழும்பு, ஏப்.14

இலங்கையிலுள்ள கடற்கரைகளுக்கு நீலக்கொடி சான்றிதழ் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப் டும் என நாடாளுமன்ற நிலையியல் குழுத் தலைவர் அஜித் மானப்பெரும தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் - இலங்கையைச்சுற்றி வர கடல் இருந்தும் நாம் இதுவரை ஒரு கடற்கரைக் குக்கூட நீலக்கொடி சான்றிதழ் பெறவில்லை. இந்தி யாவிலுள்ள எட்டு கடற்கரைகளுக்கு நீலக்கொடி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள 5 ஆயிரம் கடற்கரைகளில் 42 கடற்கரைகள் இலங்கையில் உள்ளன. கடற்க ரைக்கு வருபவர்களுக்கு சுத்தமான சூழல் அவசியம். நீச்சலில் ஈடுபடுபவர்களுக்கு தூய நீர் அவசியம். ஒழுங்கான பராமரிப்பு இருப்பதோடு, உரிய கழிப் பறை வசதிகளு[illegible]கவேண்டும்.

மீன்பிடி அமை[illegible]ல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, கரையோர முகாமைத்துவ பாதுகாப்புத் திணைக்களம், உல்லாசப்பிரயாண அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை என்பன ஒன்றி ணைந்து செயற்படவேண்டும். அப்போது தான் நாங் கள் நீலக்கொடி சான்றிதழுக்கு விண்ணப்பிக்க முடி யும். சம்பந்தப்பட்ட தரப்புகள் நீண்டகாலமாக இதனை செய்யத்தவறிவிட்டன. நீலக்கொடி சான்றி தழ் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள் ளுமாறு நாங்கள் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அறி வுறுத்தியுள்ளோம். அடுத்த நான்கு மாதங்களுக்குள் இந்த நடவடிக்கைகள் பூர்த்தியாகும் - என்றார். (எ-6)


## நாகபூஷணி திருமண சேவை

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.
வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உத்தியோகத்தர், ஆசிரியர், தனியார் துறையினர் மற்றும் வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் உள்ளனர்.
மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்படும்.
10/2 முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்ப்பாணம் வேம்படிச் சந்திக்கு அருகில்)
(CS/00205) J-1

021 222 9306, 071 999 9306, 077 138 7596



## விற்பனைக்கு

உப்புக்கேணி வீதி, பெரிய மாவடி சாவகச்சேரியில் 6 பரப்புக் காணியில் அமைந்த வீடு
"குமாரபவனம்" விற்பனைக்கு உண்டு.
கிணறு, இரண்டு குழாய் கிணறு, 2 குளியலறைகள் அடங்கிய வீடு. (கச்சாய் வீதிக்கு அருகாமையில்)
தொடர்புகளுக்கு :
Whatsapp 0033 767 140 453
077 494 8151
(CS/28244) J-1


# அண்ணன் அடித்து தம்பி உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 14

கண்டி மாவட்டம், கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நில்லம்பை யோகலெட்சுமி தோட்டத்தில் தனது தம்பியை அண்ணன் அடித்துக் கொலை செய்துள்ள கொடூர சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

யோகலெட்சுமி தோட்டத்தைச் சேர்ந்த கிட்ணசாமி கருணாநிதி (வயது-32) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்திய அண்ணன் சில தினங்களுக்கு முன்னரே சிறைச்சாலையில் இருந்து வந்துள்ளார். அதன்பின்னர் அநு ராதபுரம் பகுதியில் கூலிவேலை செய்துவந்த நிலையில் நேற் றுமுன்தினம் மதியம் திடீரென ஊருக்குச் சென்றுள்ளார்.

அண்ணனுக்கும், தம்பிக்கும் இடையில் காணி பிரச்சினை இருந்து வந்த நிலை யில், அது தொடர்பில் நேற்றும் வாய்த்தர்க் கம் ஏற்பட்டு, கொலையில் முடிந்துள்ளது. சம்பவத்தின் பின்னர் அண்ணன் தப்பிச் செல்ல முற்பட்டபோது நில்லம்பை பஸ் நிலையத்தில் வைத்து அண்ணனை ஊர் மக்கள் மடக்கிப்பிடித்து, பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம)

## 84 ஆவது ஆண்டு விழா

அராலி, ஏப். 14

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலை யத்தின் 84 ஆவது ஆண்டு விழா, நிலைய அரங்கத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள் ளது.

அராலி தறணன் முருகன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ தி.சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனை பொறுப்பதிகாரி மருத்துவர் எஸ்.செந்தூரன், வட்டுக் கோட்டை பொலிஸ்நிலைய பொறுப்பதி காரி டபிள்யூ.டி.ரி.கொஸ்தா, கௌரவ விருந்தினர்களாக சனசமூக நிலைய அபி விருத்தி உத்தியோகத்தர் திருமதி நோபேட் யூலியன் ஜெயமாலினி, அராலி மத்தி கிராம அலுவலர் ப.தீசன், ஓய்வுபெற்ற அதிபர் வி.சிவஞானபோதன், அராலி முருக மூர்த்தி வித்தியாலய அதிபர் த.தவரத்தி னம், சுழிபுரம் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் வி.பிரக லாதன், நிலையப்போசகர் இ.வசந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

## இன்று மஹோற்சவம்

வட்டுக்கோட்டை, ஏப். 14

அடைக்கலந்தோட்டம் அருள்மிகு ஸ்ரீ கந்த சுவாமி திருக்கோவில் வருடாந்த மஹோற் சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணிக்கு ஆரம்பமாகவுள் ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சப்பரத் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறு மென ஆலய பரிபாலனசபையினர் தெரி வித்துள்ளனர். (ப)

## குருதிக் கொடை முகாம் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 14

குருதித் தட்டுப்பாட்டைக் கருத்திற் கொண்டு யாழ்.தமிழ் பவுண்டேஷன் நிர்வாகம் ஏற் பாடு செய்துள்ள குருதிக் கொடை முகாம் நிகழ்வு, உடுப்பிட்டி உலக இரட்சகர் தேவா லய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 2 மணி வரை நடைபெறவுள்ளது. நிகழ்வில் அனைவரும் தவறாது கலந்து கொண்டு குருதிக் கொடைப் பணிக்குப் பங்களிப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ள னர். (ப-66)


எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

யாழ் நகரில் உங்கள் தேவைக்கேற்ப சகல விதமான தீயணைக்கும் கருவிகளையும் விற்பனை செய்யும் வடமாகாணத்தின் அனுபவம் வாய்ந்த நிறுவனம்

## YARL FIRE PROTECTORS
யாழ். தீ அணைக்கும் பாதுகாப்பாளர்கள்





- புதிய தீ அணைக்கும் கருவிகளும் மற்றும் Fire Alarm System களை யும் பெற்றுக் கொள்ளலாம்.
- பாவித்த தீ அணைக்கும் கருவிகளை மீள் நிரப்பியும் கொடுக்கப்படும்.
- புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களுக்கு தீ அணைப்புக் கருவிகள் (Fire Alarm System) பொருத்திக் கொடுக்கப்படும்.

தீ விபத்திலிருந்து உங்களை பாதுகாப்பதே எங்கள் நோக்கம்

உங்கள் உடனடித் தொடர்புகளுக்கு: T.P: 021 221 9905

111B, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
111B, Kannathiddy Road, Jaffna.



## பணிப்பெண் தேவை

குழந்தையைப் பராமரிப்பதற்கு 40 வயதிற்குட்பட்ட பணிப்பெண் தேவை.
சேவை நேரம் காலை 8.00 - 4.00 மணிவரை.
(CS/54710) J-1
077 669 2415, 076 143 4393



## வீடு வாடகைக்குத் தேவை

திருநெல்வேலியில் இருந்து 5Km சுற்றுவட்டத்தில் வீடு வாடகைக்குத் தேவை.
வீட்டின் உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(CS/54710) J-1
077 669 2415, 076 143 4393



## பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு தங்கி நின்று வீட்டு வேலை செய்வதற்கு 50 வயதிற்குட்பட்ட வீட்டுப்பணிப்பெண் தேவை.
சம்பளம் மாதாந்தம் 40 000/=
இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை 5/6 தினங்கள் விடுமுறையுடன் போக்குவரத்து செலவும் வழங்கப்படும்.
(CR/42210) J-1
தொடர்பு:- 076 498 8811




## பெண் உதவியாளர் தேவை

வல்வெட்டியில் உள்ள பெண் ஒருவருக்கு உதவியாக பெண் உதவியாளர் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(CS/54638) J-1
076 074 2664


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சின்னர் சங்கரப்பிள்ளை



மட்டுவில் வடக்கு, கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் சங்கரப்பிள்ளை கடந்த 10.04.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-சின்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இராசாத்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான குஞ்சுத்தம்பி, இராசம்மா, இரத்தினம், நல்லம்மா ஆகியோரின் சகோதரனும், சிறீதரன் (ஜேர்மனி), ரவீந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சுசீலா மற்றும் சுதன் (சுவிஸ்), சுரேஸ் (ஜேர்மனி), சுமித்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்தி (ஜேர்மனி), நிறைவதனி (ஜேர்மனி), ஜெயமதி (சுவிஸ்), பாகீஸ்வரி (ஜேர்மனி), சர்மிளா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சோபனா, சங்கவி (ஜேர்மனி), றமீதா, ரஜானா (ஜேர்மனி), கஜானன், ரவிசன் (ஜேர்மனி), கிருஸ்டியன் (சுவிஸ்), சர்வின் (ஜேர்மனி), பிருந்தன், பவித்திரன் (சுவிஸ்), அஸ்வின், ஷன்றியா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
கல்வயல்,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்

தோற்றம்
19.09.1935

மறைவு
10.04.2024



கைதடி குருசாமி வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி, அதிபராக சேவை நியமனம் பெற்றுச் சென்ற எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியை விஜியந்தி சதீஸ்வரன் ஆகியோருக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வு கைதடி குருசாமி வித்தியாலய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (எ-159)



இணுவில் ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலைய வளாகத்தில், இணுவில் இளைஞர்களின் ஏற்பாட்டில் முதற்கட்டமாக ஒருதொகுதிப் பயன்தரு மரங்கள், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடப்பட்டன. (ப-66)





சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், வாராந்த நிகழ்வு, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில்நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன், சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், இசைக் கலைஞர் [illegible] (ப-63)

தமிழ் சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு, புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்குட்பட்ட உடையார் கட்டு வடக்குப் பகுதியைச் சேர்ந்த 75 முதியவர்களுக்கு, உடையார் கட்டு வடக்கு முதியோர் சங்க கட்டடத்தில் உலர் உணவுப் பொதிகள், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ப-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜஸ்தான் வெற்றிநடை





**உடனடி வேலைவாய்ப்பு**

பிரபல்யமான கம்பனிக்கு வட மாகாணத்திலும், யாழ்ப்பாணத்திலும், ஆண் / பெண் **அலுவலக உதவியாளர்கள், முகாமையாளர்கள் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை.**

**076 112 4145**

பஞ்சாப் அணியை வீழ்த்தி ராஜஸ்தான் ரோயல்ஸ் நேற்று வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் மற்றும் பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

பஞ்சாப் அணி சீரான இடைவெளியில் இலக்குகளை இழந்து கொண்டேயிருந்தது. அந்த அணி சார்பில் அதிரடியில் கலக்கிய சச்சாங் சிங் 9 ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றினார். ஆனால் இறுதியில் அஸ்ரொஸ் சர்மா 16 பந்துகளில் 31 ஓட்டங்களை விளாச 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது. அவேஸ்கான், கேசவ் மகராஜ் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலளித்து ஆடிய ராஜஸ்தான் அணிக்கு ஆரம்பம் சுமாராக அமைந்தாலும் அந்த அணி ஒரு கட்டத்தில் இலகுவான வெற்றியைப்பெறும் நிலையில் இருந்தது. ஆனால் இறுதி நேரத்தில் இலக்குகளை அடுத்தடுத்து இழந்து நெருக்குவாரத்தை எதிர்கொண்டது. இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் 10 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவை என்ற நிலையில், ஹெட்மயர் முதலிரண்டு பந்துகளிலும் ஓட்டம் எதனையும் பெறவில்லை. ஆட்டத்தின் போக்கு மாறும் நிலையிருந்தது. ஆனாலும் அடுத்த பந்தில் ஆறு ஓட்டத்தை விளாசி ஆட்டத்தை ராஜஸ்தான் பக்கம் கொண்டு வந்தார். அடுத்த பந்தில் 2 ஓட்டங்கள் அதற்கு அடுத்த பந்தில் மீண்டும் 6 ஓட்டங்கள் விளாசி ஒரு பந்து மீதமிருக்க 3 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது ராஜஸ்தான். பந்து வீச்சில் ரபாடா, சாம்கரன் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (ஒ-5)

## அதிஸ்டலாப சீட்டிழுப்பு

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு காரைநகர் ஊரியம்பதி அண்ணமார் ஆலய திருப்பணி நிதிக்கான அதிஷ்டலாப சீட்டிழுப்பு (2024) வெற்றி பெற்ற வெற்றியாளர்களின் வெற்றி இலக்கங்கள்.

**1 ம் பரிசு (2181)**
**2 ம் பரிசு (617)**
**3 ம் பரிசு (1469)**

**ஆறுதல் பரிசில்கள் வென்ற வெற்றியாளர்களின் வெற்றி இலக்கங்கள்**

**1. (1323), 2. (061), 3. (665), 4. (621), 5. (594),**
**6. (1110), 7. (414), 8. (2136), 9. (1523), 10. (1527)**


**நன்றி**

**தகவல்:**
**ஆலய பரிபாலன சபை**
**T.P: 077 045 9864**

(CS 212) V-1

## மரண அறிவித்தல்

### அமரர் பரந்தாமன் முருகையா



**தோற்றம்** 04.08.1951 **மறைவு** 03.04.2024

யாழ். மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough ஐ வதிவிடமாகவும் கொண்ட பரந்தாமன் முருகையா அவர்கள் 03.04.2024 (கனடா) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னார், காலஞ்சென்ற முருகையா-அன்னம்மா தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற குமாரசுந்தரம்-தர்மவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், தனபாலினி அவர்களின் பாசமிகு கணவரும், கிருபாகரன் (இலங்கை), காலஞ்சென்ற நகுலேஸ்வரன், மற்றும் மகேஸ்வரன் (இலங்கை), கெங்காதரன், (ஜேர்மனி) விஜயலக்ஷமி (இலங்கை), அனந்தலக்ஷமி (இலங்கை), ராஜலக்ஷமி (கனடா) இராஜராஜேஸ்வரி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேன்மொழி (இலங்கை) விக்னராஜா (லண்டன்), யோகசுந்தரி (லண்டன்), நர்மதா (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.04.2024 காலை 9.00 மணியளவில் Chapel Ridge Funeral Home Cremation Centre (கனடா) இல் இடம்பெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**185/1 கில்னர் லேன்**
**யாழ்ப்பாணம்**
**021 221 6742**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



இயற்றாலை கலைவாணி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த சிறுவர் சந்தை நிகழ்வு முன்பள்ளி மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இடம்பெற்றது. (எ-159)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### வாயில்...

மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். 3 பிள்ளைகளின் தந்தையான கிளிநொச்சி, உருத்திரபுரத்தைச் சேர்ந்த மாணிக்கராசா சிவசந்திரன் (வயது - 40) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவர் கடந்த 4ஆம் திகதி வாயில் பீடியைப் பற்றவைத்தவாறு மோட்டார் சைக்கிளுக்குப் பெற்றோல் விடுவதற்காக, பெற்றோல் போத்தல் மூடியைத் திறந்துள்ளார். அது தவறுதலாகத் தீப்பற்றியது. படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

(அ-ஒ-26)


### புராதன...

பல தசாப்தங்களாக பக்தர்கள் யாரும் வழிபடாத காரணத்தால் கோயில் மூடப்பட்டிருந்தது. காலப்போக்கில் சிதிலமைடைந்து காட்சியளித்த கோயில், 10 நாள்களுக்கு முன்பு முழுமையாக இடிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் அமைந்திருந்த இடத்தில் புதிதாக வர்த்தக வளாகம் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 09 . 1960



மறைவு 12 . 04 . 2024

### நடராசா தில்லைநாதன்

காரைநகர் கள்ளித்தெரு, தங்கோடையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தில்லைநாதன் (நாதன் - ஊழியர், சிவகணேசன் புடைவையகம்) 12.04.2024 வெள்ளிக்கிழமை காரைநகர் அண்டவேல் பிள்ளையார் திருப்பாதக்கமலங்களில் சரணடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தில்லையம்பலம் - இந்திராணி தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், கிரிபரன் (பொறியியலாளர், Nathan Engineering Solutions), ஜனனி (HNDIT), பிரணவி (யா/இந்து மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அஜந்தனின் (கனடா) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் தேவராஜா (ஜேர்மனி), புஸ்பராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமசிவம்பிள்ளை, நளினி, கலாராணி, மகேஸ்வரி, புவனேஸ்வரி, செல்வநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் சண்முகலிங்கம், கிருபமலர் ஆகியோரின் சகலனும், சிவசுதன், சிவகரன், சிவரூபன், சிவசுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிரா, அருண், அஜித், கஜதீபன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2024) காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

94, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 197 6590

(CS/54723) J-1

## மரண அறிவித்தல்



### அந்தோனிப்பிள்ளை சின்னாச்சி டெய்சி

நெடுந்தீவு பெருக்கடியை பிறப்பிடமாகவும் உருத்திரபுரம் கிழக்கை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை சின்னாச்சி டெய்சி (இளைப்பாறிய அரச மருத்துவமாது அவர்கள் 12.04.2024 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர்-மார்கிறட் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னையா அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அன்ரன் அன்பழகன் (ஆசிரிய ஆலோசகர்) காலஞ்சென்ற அன்ரனிற்றா தயாநிதி, யூடித்திருசா ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கத்துக்காக நாளை (15.04.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு திருப்பலிக்காக புனித பற்றிமா ஆலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு உருத்திரபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல: 41, D.8
உருத்திரபுரம், கிளிநொச்சி
077 473 3792


தகவல்:
குடும்பத்தினர்.

(CR 42217) V-1

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 12 . 1944



மறைவு 12 . 04 . 2024

### திரு நாகமணி மகேந்திரன்

(முன்னாள் தலவாக்கலை பாமஸ்டன் குரூப் மற்றும் இறக்குவானை ஸ்பிரிங்வூட் குரூப் பெருந்தோட்ட தலைமை எழுதுநர்)

பதுளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், தலவாக்கலை, இறக்குவானை மற்றும் ஜா எல ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட நாகமணி மகேந்திரன் அவர்கள் 12-04-2024 வெள்ளிக் கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - செல்லம்மா தம்பதியின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - செல்லாச்சி தம்பதியின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற தங்கமலர் அவர்களின் அன்புக் கணவரும், மகாலட்சுமி (கனடா), தேவதாஸ் (பேர்லின்-ஜெர்மனி), லோகேந்திரலிங்கம் (கனடா), சிவராமன்(வவுனியா) ஆகியோரின் மூத்த சகோதரும், பிரதீபன் (DFCC BANK), சஞ்சுதா (Shakthi TV) ஆகியோரின் அன்புத் தந்தையும், யசாங்கி (Seylan Bank) கிருஷாந்த (Shakthi TV) ஆகியோரின் அன்பு மாமனாரும், திலன்யா, திவேன் தேஜஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான இலட்சுமணசாமி மற்றும் சாவித்திரி (பேர்லின்), பத்மலோஜினி (கனடா) செந்தில்மணி (வவுனியா), கனகசபை, மகேஸ்வரி, தனலட்சுமி, கனகமலர், சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (15-04-2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஜா எல நகரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஜா எல கப்புவத்த மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

197/1, சென் றீட்டா மாவத்தை,
தும்பலிய, வெலிகம்பிட்டிய, ஜா எல.

தகவல்:
குடும்பத்தினர்

ம.பிரதீபன் (மகன்) 0776203599 அல்லது 0742199585
கி. சஞ்சுதா (மகள்) 0711642231 அல்லது 0779157097

(CS/54722) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 11 . 1943



மறைவு 13 . 04 . 2024

### பிரம்மஸ்ரீ தியாகராஜசிவஐயர் குமாரசதாசிவசர்மா

(புகையிரத நிலைய அதிபர் - பணி ஓய்வு)

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், நீர்வேலிமத்தி, நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ தியாகராஜசிவஐயர் குமாரசதாசிவசர்மா நேற்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர்கள் தியாகராஜசிவஐயர்-இராசலட்சுமி அம்மா தம்பதியின் மகனும் அமரர்கள் சிவசுப்பிரமணியசர்மா விமலாதேவி அம்மா தம்பதியின் மருமகனும் கமலாதேவி அம்மா அவர்களின் அன்புக்கணவரும் அமரர் கணேஸ்வரசர்மா, நாகரத்தினம் (சுன்னாகம்), அமரர் சரவணபவசர்மா, சுலோசனா (அவுஸ்ரேலியா) அமரர் ஸ்ரீதரசர்மா, கிருபாகரசர்மா (யாழ்ப்பாணம்), வசந்தி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலரூபசர்மா (இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்), திவாகரக்குருக்கள் ஆகியோரின் அருமைத் தந்தையாரும் நித்தியகல்யாணி, கௌசல்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிநயன், ஹர்ஷிதா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.04.2024) ஞாயிறு பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நீர்வேலி, சீயாக்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலிமத்தி,
நீர்வேலி.

தகவல்:
கு. பாலரூபசர்மா
கு. திவாகரக்குருக்கள்
075 953 6368

(CS 28322) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குப்..

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் எத்தனை ஆபத்தான கட்டடங்கள் இனம்காணப்பட்டுள்ளன? அவற்றில் எத்தனை இடித்தழிக்கப்பட்டுள்ளன? எத்தனை இன்னமும் பாவனையிலுள்ளன? இடித்தழிக்கப்பட்டவற்றுக்குப் பதிலாக புதிதாக அமைக்கப்பட்ட கட்டடங்கள் எத்தனை? என்ற விவரங்களைக் கோரி வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு முன்வைக்கப்பட்ட தகவல் கோரிக்கைக்கு வழங்கியுள்ள பதிலிலியே மேற்குறித்த விவரங்கள் வெளியாகியுள்ளன,

யாழ்ப்பாண வலயத்தில் 12, வலிகாமம் வலயத்தில் 29, வடமராட்சி வலயத்தில் 11, தென்மராட்சி வலயத்தில் 13, தீவக வலயத்தில் 8,

கிளிநொச்சி வடக்கு வலயத்தில் 3, கிளிநொச்சி தெற்கு வலயத்தில் 15, வவுனியா வடக்கு வலயத்தில் 2, வவுனியா தெற்கு வலயத்தில் 11, மன்னார் வலயத்தில் ஒன்று, மடு வலயத்தில் 9,

முல்லைத்தீவில் 2 என்றவாறாக 116 கட்டடங்கள் ஆபத்தானவையாக உள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது - இவ்வாறு கல்வித்திணைக்களம் வழங்கிய பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் பாவனையிலுள்ளவை, இடித்தழிக்கப்பட்டவை அவற்றுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டவை ஆகிய விவரங்கள் கல்வித் திணைக்களத்திடம் இல்லை என்றும் பதிலளிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## ஜூனில்...

இடையிலான கலாசார மற்றும் மதப் பிணைப்புகளை வலுப்படுத்தும் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தலைவர் அதுல கல்கெட்டிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு - மும்பைக்கான நேரடி விமான சேவையை இன்டிகோ நிறுவனம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

## வணிக...

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வர்த்தக மையக் கடைத் தொகுதி ஒன்றில் நபர் ஒருவர் நடத்திய கண்மூடித்தனமான கத்திவெட்டில் 6 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. ஒன்பது மாதக் குழந்தை உட்பட பத்துக்கும் அதிகமானோருக்கு அவசர சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன .

தாக்குதலாளியைப் பொலிஸார் சுட்டுக் கொன்றுவிட்டனர் என்பதை நியூ சவுத்வேல்ஸ் பொலிஸ் உறுதிப்படுத்தியிருக்கிறது.

சிட்னி நகரில் பொண்டி சந்தியில் அமைந்துள்ள நாட்டின் பிரபலமான வெஸ்ட்பீல்ட் வணிக வளாகத்திலேயே அந்நாட்டு நேரப்படி சனிக்கிழமை மாலை இந்தத் தாக்குதல் நடந்திருக்கிறது. பரபரப்பான வார இறுதி நாளில் பல நூற்றுக்கணக்கானவர்கள் வணிக வளாகத்தை நிறைத்திருந்த சமயத்திலேயே கத்தியுடன் தோன்றிய நபர் ஒருவர் திடீரென அங்கு எதிர்ப்பட்ட அனைவரையும் தாறுமாறாக வெட்டித் தள்ளியுள்ளார்.

றக்பி விளையாட்டு வீரர்கள் அணியும் விதமாக ஆடை அணிந்து தோன்றிய தாக்குதலாளி பிற்பகல் 3.30 மணியளவில் வணிக வளாகத்துக்கு வந்து, அங்கு நடமாடித் திரிந்ததைக் கண்காணிப்புக் கமராக்கள் காட்டியுள்ளன.

வணிக வளாகம் அமைந்துள்ள பகுதியில் நூற்றுக்கணக்கான பொலிஸார் மற்றும் அம்புலன்ஸ்களுடன் மீட்புப்பணியாளர்கள் நிறைந்திருப்பதைக் காட்டும் வீடியோ படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன. கத்தி வெட்டுக்கு இலக்கானவர்கள் வீழ்ந்து கிடந்து அலறுவதையும் நபர் ஒருவர் நீண்ட கத்தியுடன் வளாகத்தின் உள்ளே அங்கும் இங்குமாக ஓடுவதையும் காட்டும் காட்சிகளும் வைரலாகப் பரவியுள்ளன.

இறுதியில் பெண் பொலிஸார் தனியாளா[illegible] தாக்குதலாளியை சுட்டுக் செ[illegible]ளார். (அ-ஒ-இ)

## ஞானசாரருக்கு...

புத்தாண்டையொட்டி விசேட அரச மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படும் கைதிகளின் பட்டியலில், கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்கும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரரின் பெயர் இடம்பெறவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் பொதுமன்னிப்பின் கீழ் அவரை விடுவிக்கமுடியாது எனச் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## ஒரு வடை...

இந்நிலையில், களுத்துறைக்கு சுற்றுலா சென்ற அவர் உணவகம் ஒன்றுக்குச் சென்று உளுந்து வடை மற்றும் ஒரு கப் தேநீர் அருந்தியுள்ளார். இதற்காக அவரிடம் இருந்து ஆயிரம் ரூபா கோரப்பட்டுள்ளது. இந்த விலைகள் நியாயமற்றவை என்று அவர் மிகவும் பணிவாகக் கூறும்போது, 800 ரூபா கோரப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர், உணவகம் முன்நின்று ஓர் உளுந்து வடையின் விலை எவ்வளவு என்று ஒரு வழிப்போக்கரிடம் கேட்கிறார். 150 ரூபா விலையுள்ள உளுந்துவடைக்கும், தேநீருக்கும் 800 ரூபா வசூலித்தது தெரியவந்ததும் கடை உரிமையாளர் உடனடியாக வெளிநாட்டவருக்கு 200 ரூபாவை மீளக் கொடுத்துள்ளார். அப்போதும் கூட அவரிடம் இருந்து 600 ரூபா வசூலிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட சுற்றுலாவி, ''பணம் பிரச்சினை அல்ல. ஆனால் விலை தொடர்பில் குறிப்பிட்ட கொள்கை இருக்க வேண்டும். மக்கள் நேர்மையாக இருப்பது முக்கியமானது'' என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-ஒ-இ)

**வேலை ஆட்கள் தேவை**

(ஆண், பெண்)

மாலைகட்டத் தெரிந்தவர்களும் Gift கிப்ற் கடைக்கும் பெண் பிள்ளைகள் தேவை.


தொடர்புகளுக்கு: 074 147 2445

**வீடு வாடகைக்கு**

வீடு வாடகைக்கு விடப்படும்.
இடம்: யா/சா/இ/க. அருகாமையில்.
கண்டி வீதியில் உள்ளது.
சங்கத்தானை.

தொடர்பு: 077 033 9477

## மரண அறிவித்தல்



### நல்லையா இரத்தினம்

அனலைதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.04, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா இரத்தினம் அவர்கள் நேற்று (13.04.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, சுந்தரம், சின்னம்மா, தம்பையா, மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகேஸ்வரி, செல்வராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீகுமார், துஷ்யகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ரீதேவி (முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), ஸ்ரீபிரியா (கணக்காளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்), தவக்குமார் (லண்டன்), ஸ்ரீவித்தியா, கோகுலன் (காணி வெளிக்கள உத்தியோகத்தர், பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு), சாருகா, வர்ஷிகா, ஹரீஸ் (லண்டன்), இன்பறூபன், யோகசம்பந்தன், சர்மிளா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிசன், கவீஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2024) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.4, குமாரசாமி வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்**
077 914 7318

(CS 213) A-1

**சிறுநீரகம் தேவை**

சிறுநீரகம் செயலிழந்த 46 வயதுடைய ஒருவருக்கு O(+) குருதிவகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
H.LA Report இருப்பின் Whats app பண்ணவும்.

தொடர்பு:- 076-476 7400
075 633 0599

(CS/54718) J-1

**சமையலாளர் தேவை**

இயக்கச்சியில் இயங்கும் பிரபல
ஹோட்டல் ஒன்றிற்கு
Western and Sri Lankan
உணவுகளை தயாரிப்பதற்கு
சமையலாளர் தேவை.

077 336 1750

(CS/54716) J-1

**தவறவிடப்பட்டுள்ளது**

யாழ்ப்பாணம் தபாலகம், காக்கை தீவு மீன்சந்தை,
K.K.S Road வீதியூடாக பலாலி வீதி
கோண்டாவில் சந்திக்கும் கல்வியங்காடு (GPS)
விளையாட்டரங்கிற்கும் இடையில்
மோட்டார் சைக்கிள் முன்பக்க இலக்கத்தகடு
(NP MF 1846) தவறவிடப்பட்டுள்ளது.
கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும்.

077 663 6384, 021 222 1764

(CS/54703) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Create your journey as a NURSE

முதல் முறையாக சுன்னாகத்தில் 100% உறுதியான தொழில் உத்தரவாதத்தைக் கொண்ட தாதியர் கற்கை நெறியானது College of Nursing Studies (CNS) இல் ஆரம்பமாகிறது.

இந்த அரிய வாய்ப்புக்கு முந்திக்கொள்ளுங்கள்.

APPLY NOW

**தகைமைகள்**
* க.பொ.த சாதாரண தரத்தில் குறைந்தது ஏதாவது 5 பாடங்களில் சித்தி.
* உயரம் 4 அடி 10 அங்குலம்.
* 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

Graduation In One Year

**விசேட சலுகைகள் :**
* கற்கை நெறியில் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு இலவச ஆங்கிலப் பயிற்சி நெறி வழங்கப்படும்.
* வெளி மாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு.
* இலவச தாதியர் கற்கை நெறியும் உண்டு. (நிபந்தனைக்கு உட்பட்டது)

IELTS & Spoken Englishம் நடைபெறுகின்றன

மேலதிக விபரங்களுக்கு:
077 856 0498
077 333 0498
Email : esrajee@gmail.com


# மரண அறிவித்தல்

மண்ணில் 28 . 07 . 1941



விண்ணில் 10 . 04 . 2024

## அன்னா இராஜேஸ்வரி அந்தோனிப்பிள்ளை

இல 36/2 நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அன்னா இராஜேஸ்வரி அந்தோனிப்பிள்ளை 10.04.2024 புதன்கிழமை இறைவனடி சேர்த்தார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான V.M. ஜோண்பிள்ளை (ஓய்வு நிலை அதிபர்) மார்கிறேட்டின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முடியப்பு - எலிசபெத்தின் மருமகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் (எயார் சிலோன்) அன்பு மனைவியும், எமில் நிர்மலநேசன் (பிரான்ஸ்), மேரி அருள்வதனா (ஓய்வு நிலை ஆசிரியர்), பெலிசியா ஜெயவதனா (பிரான்ஸ்), எட்வேட் குணநேசன் (பிரான்ஸ்), மரீனா மகிழ்வதனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மேரி கொன்சலா, மதுரநாயகம், எமில் யேசுரட்ணம், சுரூபா, அன்ரன் ரவீந்திரன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற ராசநாயகம் மற்றும் நீற்ரா பரமேஸ்வரி, காலஞ்சென்ற ராஜ சுந்தரம் மற்றும் ராஜசிங்கம் ஆகியோரின் சகோதரியும், மொறின் யூடினா (மக்கள் வங்கி), றோய் டொனால்ட் டயான் (அஞ்சலகம் -பண்டத்தரிப்பு), பிரசாந் (எழுதுவினைஞர் - சட்டத்தரணி அலுவலகம்), லூயிசா டினிசா (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - ஊர்காவற்துறை). ஜோய் -றதினி, றோய், லோய், ஜொணி - பிரெண்டா, பெனி - கிறிஸ்ரீன், எறின், எல்ரா, எட்னா, றெனால், றொணி, றெறி, ஜெறி, எல்வின் ஆகியோரின் பேர்த்தியும், ஆன் தஸ்மிதா, ஆன் தனாராவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (15.04.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல 36/2 புனித ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.
021 222 1429

(CS/54720) J-1


# தென்னிந்திய தலயாத்திரை

30 ஆலயங்கள் தரிசனம் செய்ய முடியும் — 12 நாட்கள்

**கட்டணத்தில் உள்ளடங்குபவை**
* விமானபயணச்சீட்டு
* குளிரூட்டப்பட்ட வாகனம்
* மூன்று வேளை உயர்தர
* சைவ உணவு
* தேநீர் / பழச்சாறு
* குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
* நுழைவுக்கட்டணம் (சிறப்புத்தரிசனம்)
* சுற்றுலா மேலாளர் நினைவுப் பரிசில்

தொடர்புகளுக்கு: 077 711 4828

BOHAR TRAVELS
Bohar International (Pvt) Ltd
510, பருத்தித்துறை வீதி, நல்லூர்

(cs 28365) (N-1)



# வீடு விற்பனைக்கு

யாழ் கோண்டாவில் மேற்கு புகையிரத நிலையத்திற்கு அண்மையில் இந்துக் கல்லூரிக்கு முன்பாக முத்தட்டுமட ஒழுங்கையில் அமைந்துள்ள 3 1/4 (மூன்றேகால்) பரப்புக் காணியுடன் கூடிய நல்ல நிலையிலுள்ள **வீடுவளவு விற்பனைக்கு உண்டு.**

தரகர் தேவை இல்லை.

தொடர்பு:- 071 811 1353

(CS/54677) J-1



# சிறிராம் ஜுவல்லர்ஸ்

* யாழ். நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எதிர்வரும் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்.
* 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 16.04.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக் கழிவில் வழங்கப்படும்.
* அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதி செய்து தரச்சான்றும் வழங்கப்படும்.

இல. 158, 193
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 165 1729, 07777 305 67, 021 222 8334

(CR 42209) J-1


### அரிசி...

அரிசி இறக்கும திக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள தாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரி விக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், கடந்த பெப்ரவரி மாதம் அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவும் அபாயம் ஏற்பட்டபோது, அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்கியதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள் ளார். (அ-ஓ-இ)


## SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்
தனி, குழு வகுப்பு
ஆண்டு 7 to GCE OL, AL
பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.
K.Ganesh B.A 077 766 8725

## தேவை

வங்கியில் தொழில் புரியும் குடும்பம் ஒன்றிற்கு யாழ்நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.
077 331 1952

## கடைத்தொகுதி வாடகைக்கு

K.K.S வீதி மருதனார் மடம் (பிரதேச சபைக்கு அருகாமையில்) 53 x 44 அடி ஐ கொண்ட 1st and 2nd Floor கடைத்தொகுதி வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:- 077 856 0498
077 333 0498

## காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் வடக்கு, மருதங்குளம் விழுபளை வீதியில் வடக்கு நோக்கி 1/2 க் கி.மீ தூரம் நிலப்பரப்பு - 65 தென்னை, தோட்டப் பயிர்செய்கைக்கு உகந்த நிலம். தரகர் தேவை இல்லை.
077 691 4151, 021 227 0948

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் செல்வமஹால் திருமண மண்டபத்திற்கு அருகில் பலாலி வீதியில் 18 அடி பாதையுடன் 7 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
077 229 4985, 077 621 2039

(CS/54700) J-1

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் 2 பரப்பு வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.
Contact Number
+94 74 002 2113

## அலுவலர்கள் தேவை

வடமாகாணத்தில் இயங்கும் கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு வேலைத்தல மேற்பார்வையாளர், படவரைஞர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
**குறைந்தது 3 வருட முன் அனுபவம் தேவை.**
077 699 9021

(CS/00148) J-1

## நீர்க்கசிவை தடுப்பதற்கு

எமக்கு ஆதரவளித்த கட்டட பொறியியலாளர்கள், கட்டட ஒப்பந்தகாரர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

Finex ஸ்தாபனத்தாரின் ஏகவிநியோகஸ்தர்களிடம் இருந்தும் உங்கள் தரமிக்க இரசாயன பொருள்களை விலை கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம். போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

நானென்ற ஆணவத்தை நயந்தறுத்து விடுத்தேன்
நன்மைபெற்றுக் குகைதனிலே வாழ்ந்திருக்க அடுத்தேன்
தானென்ற கருவமதைத் தணித்து விட்டு வந்தோம்
தவமேதான் கதி என்று சரவழியில் உகந்தோம்.
-மௌனசித்தர்

மலை : 33 வள்ளுவர் ஆண் (14.04.2024) சிகரம் : 196




# அநுரகுமாரவிடம் சில கேள்விகள்

○ நிலாந்தன்

ஒரு நண்பர், அவர் ஓர் இலக்கியவாதி,தொலைபேசியில் அழைத்தார். தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற விடயம் அவரைப் பதற்றமடையச் செய்திருப்பதாகத் தெரிந்தது. பொதுவேட்பாளர் என்ற தெரிவை அவர் கடுமையாக விமர்சித்தார். இனங்களுக்கிடையே அது முரண்பாட்டைப் பெருப்பிக்கும் என்ற பொருள்படவும் அவர் கதைத்தார். அதாவது சம்பந்தன், சுமந்திரன் மற்றும் சில விமர்சகர்கள் கூறுவதை அவர் பிரதிபலித்தார். அதைவிட முக்கியமாக கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, தான் ஜே.வி.பி.க்கு வாக்களித்ததாகவும் கூறினார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஜே.வி.பி.க்கு இருந்த கவர்ச்சியை விடவும் இப்பொழுது குறிப்பாக 2021 இல் நிகழ்ந்த தன்னெழுச்சிப் போராட்டங்களின் பின்னர் ஜே.வி.பி.யின் கவர்ச்சி அதிகரித்திருக்கிறது என்பது உண்மை. எனவே அந்த இலக்கிய நண்பர் இந்த முறையும் ஜே.வி.பி.க்குத்தான் வாக்களிக்கப் போகின்றார் என்று தெரிகிறது. அவரைப் போன்றவர்களை மயக்கக் கூடிய பேச்சாற்றலும் ஜனவசியமும் அநுரகுமாரவிடம் உண்டுதான்.

யாழ்ப்பாணத்திலும் கனடாவிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலும் இன முரண்பாடுகள் தொடர்பிலும் இன நல்லிணக்கம் தொடர்பிலும் அநுரகுமார ஆற்றிய உரைகள் தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பாக லிபரல் ஜனநாயகவாதிகள் மத்தியில் அதிகம் கவனிப்பைப் பெற்றிருக்கின்றன. 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது, சிவில் சமூகச் செயற்பாட்டாளரும் சட்டச் செயற்பாட்டாளருமாகிய நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டார், 'ஜே.வி.பி.யை ஆதரிப்பதன் மூலம் தென்னிலங்கை அரசியலில் தாக்கம் செலுத்த முடியுமா?' என்று.

அப்பொழுது இருந்ததைவிடவும் இப்பொழுது, ஜே.வி.பி.யின் மவுசு கூடிவிட்டது. இரண்டு பிரதான கட்சிகளையும் விட ஜே.வி.பி. பரவாயில்லை என்று சிங்கள மக்கள் மத்தியில் படித்த நகர்ப்புற நடுத்தர வர்க்கம் கருதுகிறது. ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான எதிர்பார்ப்பு உண்டா ?

உண்டாயின், அவ்வாறான எதிர்பார்ப்பு உள்ளவர்கள் பின்வரும் கேள்விகளுக்கு ஜே.வி.பி. என்ன பதில் கூறுகிறது என்பதைக் கேட்டுத் தமிழ் மக்களுக்குக் கூறுவார்களா?

முதலாவது கேள்வி, இலங்கை இனப்பிரச்சினை என்பது இலங்கைத் தீவின் பல்வகைமையை ஏற்றுக் கொள்ள மறுத்ததில் இருந்துதான் தொடங்கியது. இலங்கைத்தீவின் பல்வகைமை எனப்படுவது இந்தச்சிறிய தீவில் ஒன்றுக்கும் மேற்பட்ட இனங்களும், ஒன்றுக்கும் மேற்பட்ட மதங்களும் ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளும் உண்டு என்பதுதான். இந்தப் பல்வகைமையை ஏற்றுக்கொள்ள மறுக்கும் சிங்கள - பௌத்த பெருந்தேசியவாதம் அதாவது பெரிய இனம் ஏனைய சிறிய இனங்களின் தேசிய இருப்பை அழிக்க முற்பட்டமைதான் இனப் பிரச்சினையாகும். எனவே இலங்கைத்தீவின் பல்லினத்தன்மையை ஜே.வி.பி. ஏற்றுக்கொள்கின்றதா? ஆயின் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதனை ஜே.வி.பி. ஏற்றுக் கொள்கின்றதா? ஆயின் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதனை ஜே.வி.பி. ஏற்றுக் கொள்கின்றதா? இவை முதலாவது தொகுதிக் கேள்விகள்.

அநுரகுமார கூறுகிறார் 'தமிழ் மக்களுக்கு மொழிப்பிரச்சினை, வழிபாட்டுப் பிரச்சினை, பாதுகாப்புப் பிரச்சினைகள் போன்ற பல பிரச்சினைகள் உண்டு' ஆனால் அவையனைத்தும் தமிழ் மக்களின் கூட்டு உரிமைக்குள் அடங்கும். தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டு அவர்களுடைய கூட்டுரிமையைப் பாதுகாக்கும் ஒரு தீர்வை முன் வைத்தால் பிரச்சினை தீர்ந்து விடும். எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக் கொள்வதுதான். இந்த அடிப்படையில் இரண்டாவது தொகுதிக் கேள்விகளைக் கேட்கலாம்.

இனப்பிரச்சினைக்கு ஜே.வி.பி. முன் வைக்கும் தீர்வு என்ன? தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கின்றார்களோ இல்லையோ மஹிந்த கூறுகிறார் '13 பிளஸ்' என்று. ரணில் கூறுகிறார் '13' என்று. சஜித் கூறுகிறார்'13 பிளஸ்' என்று. இந்த விடயத்தில் ஜே.வி.பி. தமிழ் மக்களுக்கு முன் வைக்கும் தீர்வு என்ன?

ஏனைய பெரிய கட்சிகளை விடத் தன் கை சுத்தம் என்று ஜே.வி.பி. கூறுகின்றது. ஊழலற்ற, முறைகேடுகளற்ற, குடும்ப ஆதிக்கம் அற்ற ஒரு ஆட்சியைத் தன்னால் தரமுடியும் என்று வாக்கு

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(சென்றவாரத் தொடர்ச்சி)






# லக்ஷ்மன் கதிர்காமர்

# கொலை வழக்கு!





கே.வி.தவராசா

**வீதித்தடை**

கொலையாளிகளைப் பிடிப்பதற்கு ஏன் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை? மனதுங்கவும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கதிர்காமரது உயிரைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டிருந்தாலும் ஏனைய பாதுகாப்புப் படையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததேன்? அத்தகைய சூழ்நிலைகளில், பொலிஸாரும் இராணுவத்தினரும் வாகனங்களைச் சோதனை செய்வதற்காக துரிதமாக வீதித் தடைகளை இடுவார்கள். நாட்டின் மிகவும் சிரேஸ்ட அமைச்சரொருவரின் கொலையின் பின்னர், இரண்டு மணித்தியாலங்களுக்கு வீதித்தடையேதும் இடப்படவில்லை. "கொலையாளி தப்பியோடுவதற்கு போதுமான கால அவகாசம் இருந்தது." என்று சிரேஸ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் 'த சண்டே ஐலண்ட்' பத்திரிகைக்குக் கூறியிருந்தார்.

நீச்சல் தடாகத்திலிருந்து 35 மீற்றர் தொலைவிலிருந்த பக்கத்து வீட்டின் மேல்மாடியிலிருந்த ஒரு குளியலறையிலிருந்து துப்பாக்கிச் சூடுகள் வந்ததாக பொலிஸார் கூறினர். அலுமினிய பைப்களைக் கொண்டு செய்யப்பட்ட ஒரு கமரா தாங்கியின் மீது கொலையாளி துப்பாக்கி ஒன்றைப் பொருத்தி குளியலறை ஜன்னலிலிருந்த சிறு துவாரத்தினூடாகவே சுட்டுள்ளார்.

ஒரு ரொக்கட் லோஞ்சரிலிருந்து கிரனேட் ஒன்று ஏவப்பட்டது. எனினும் அது தவறிவிட்டது . இந்த லோஞ்சர் அருகிலுள்ள பற்றையிலிருந்து கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும்,கொலையாளி ரைபிளை எடுத்துக் கொண்டு தன் சகாவுடன் தப்பிச்சென்றதாகவும், கொலையாளிகள் சிறிது நேரம் அந்தக்குளியலறைக்குள் இருந்திருக்கலாம் என்றும் பொலிஸார் கூறினர். நாட்டின் மிக முக்கியமான அமைச்சரைக் கொன்று விட்டு, அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து கொலையாளிகள் மிக இலகுவாகத் தப்பித்தார்கள் என்பது ஆச்சரியமான விடயமே.

**பாதுகாப்புக் குறைபாடுகள்**

அமைச்சர் கதிர்காமரின் இல்லத்துக்கு இருபுறமும் உள்ள வீடுகள் பாதுகாப்பானவையாக இருப்பதை உறுதிப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததேன்? இரண்டு தசாப்த காலம் ஒரு சிவில் யுத்தத்தில் மூழ்கியிருந்த இலங்கை, நீண்டதொரு அரசியல் படுகொலை வரலாற்றைக் கொண்டுள்ளது. அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவின் விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட ஆட்கள் அனைத்து அமைச்சர்களுக்கும் பாதுகாப்பு வழங்குகின்றனர். துப்பாக்கிதாரிகள் இருக்கக்கூடிய இடங்களைச் சோதனையிடுவது என்பது, பிரமுகர்களின் வதிவிடங்களைச் சுற்றிலும் அல்லது பிரமுகர்களின் வாகனங்களில் பயணஞ் செய்யும் போது வழமையாக மேற்கொள்ளப்படும் ஓர் அடிப்படை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும். ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அடுத்ததாக அதி உயர் பாதுகாப்பு முன்னுரிமையைக் கொண்டிருந்த கதிர்காமருக்கு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததேன்? 'Sunday Leader ' பத்திரிகை கதிர்காமர் கொலையைப் பற்றிய தகவல்களை முக்கியமான செய்தியாக வெளியிட்ட அதே வேளையில் கதிர்காமருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு ஏன் குறைக்கப்பட்டிருந்தது என்ற கேள்வியையும் எழுப்பியிருந்தது.

2005 ஒகஸ்ட் 13 ஆம் திகதி அதிகாலை 1 மணிக்கும் 2 மணிக்கும் இடையில் அதாவது கதிர்காமர் கொலை செய்யப்பட்டு குறைந்தது இரண்டு மணித்தியாலங்களின் பின்னரே பொலிஸார் தனது வீட்டுக்கு வந்ததாக அடுத்த வீட்டின் சொந்தக்காரர் லக்ஸ்மன் தளையசிங்கம் என்பவர், ஒகஸ்ட் 15 ஆம் திகதி இடம்பெற்ற நீதிவான் விசாரணையின்போது கூறினார். (துப்பாக்கிச் சூடு எந்த வீட்டிலிருந்து நடத்தப்பட்டதோ, அந்த வீட்டைக் கொலையின் பின்னர் சோதனையிடுவதற்கு அவ்வளவு நேரம் எடுத்ததேன்?)

**பாதுகாப்பை உறுதிப்படுத்தவில்லை**

கதிர்காமரை ஒகஸ்ட் மாதமளவில் கொல்வதற்கான சதித் திட்டமொன்று பற்றிய புலனாய்வுத் தகவல் வெளிநாட்டு புலனாய்வு நிறுவனம் ஒன்றிடமிருந்து அந்நாட்டின் புலனாய்வு அமைச்சுப் பணியகத்தின் வாயிலாக கதிர்காமருக்கு கிடைக்கப்பெற்றிருந்ததாக 'சண்டே டைம்ஸ்' முன்கூட்டியே வெளிப்படுத்தியது. சுருக்கமான அவ்வெச்சரிக்கை "அவரைக் கொல்வதற்கான சதித் திட்டமொன்று 2005 ஒகஸ்ட்டில் நிறைவேற்றப்படவுள்ளது" என்று குறிப்பிட்டது. எனினும் அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்துவற்கு எவ்வித அவசர முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. "மேலதிக பாதுகாப்புக்கான அனுமதி, முதலாவது எச்சரிக்கை கிடைத்து பதினொரு மாதங்களுக்கு பின்னர் அவர் கொலை செய்யப்பட்ட தினத்திலேயே வழங்கப்பட்டமை விசித்திரமானதாகும்" கதிர்காமர் படுகொலையில் ஊடகத்துக்கு வெளிப்படுத்தப்பட்ட இத்தகைய பகிரங்கமான தகவல்களும், கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் விசாரணைகள் மற்றும் சாட்சியங்களின் வாக்குமூலங்கள் என்பவற்றின் அடிப்படையிலும் கதிர்காமரின் கொலையில் பல விடை தெரியாக் கேள்விகள் இருந்தன. இதனை இரண்டாம் எதிரியின் சார்பில் ஆஜரான எனக்கு அரச சாட்சியங்களைக் குறுக்கு விசாரணை செய்து அரச சாட்சியங்களின் உண்மைத்தன்மையை கேள்விக்குறியாக்க முடிந்தது. அதுவே இந்த வழக்கின் இரண்டாம் எதிரியாகிய இசிதோர் ஆரோக்கியநாதனை மேல் நீதிமன்றம் விடுதலை செய்வதற்கு பெரும் அனுகூலமாகவும் அமைந்தது.




**விசாரணைகள் ஆரம்பம்**

கதிர்காமர் கொலைவழக்கு 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் முறையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது முதலாம் இரண்டாம் மூன்றாம் நான்காம் எதிரிகளின் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை. இந்த நிலையில் ஐந்தாம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி விநாயகமூர்த்தியும் ஆறாம் எதிரியின் சார்பில் நானும் ஆஜராகியதையடுத்து இந்த வழக்கின் மேலதிக விசாரணைக்காக 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்துக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது போர் முடிவடைந்திருந்தது. அத்துடன் 2009 ஆம் ஆண்டு மே மாதம் இறுதிப்போரில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், பொட்டு அம்மான் அல்லது சிவசங்கர், விநோதன் சாள்ஸ் மறுபெயர் சாள்ஸ் மாஸ்டர், கோமதி மதிமேகலா அல்லது மதி ஆகியோர் மரணித்து விட்டனர் என சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கபில வைத்தியரத்ன நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். இந்த முதல் நான்கு எதிரிகளும் மரணமடைந்து விட்டதனால் இந்த வழக்கில் அவர்களின் பெயர் குற்றச் சாட்டுப் பத்திரத்திலிருந்து மீளப்பெறப்பட்டு, 5ஆம் 6ஆம் எதிரிகளான சகாதேவன், ஆரோக்கியநாதன் ஆகியோர் முதலாம் இரண்டாம் எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டு புதிய குற்றச்சாட்டுப்பத்திரம் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டது.

**மரணச்சான்றிதழ் எங்கே?**

புதிய குற்றச்சாட்டுப் பத்திரத்தை நீதிமன்றுக்கு பாரப்படுத்துகையில் 6 ஆம் எதிரியாகிய ஆரோக்கியநாதன் சார்பில் ஆஜராகிய நான் நீதிபதியிடம் பின்வரும் விடயங்களைக் கவனத்துக்கு கொண்டுவந்தேன்.

"ஒரு எதிரி இறந்ததாகக் கூறப்பட்டால், இறந்தவரின் மரண அத்தாட்சிப் பத்திரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியது சட்டத்தில் உள்ள ஒரு பிரதான விடயமாகும். குற்றச்சாட்டுப் பத்திரத்தில் முதல் நான்கு எதிரிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தவர்களில் வேலுப்பிள்ளை பிரபாகரனும், பொட்டு அம்மானும் யுத்தத்தில் மரணமடைந்துவிட்டனர் அரச தரப்பால் கூறப்படுகின்ற பொழுதிலும் அவ்விருவரினதும் மரண அத்தாட்சிப்பத்திரம் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. அரச தரப்பில் முதலிரண்டு எதிரிகளும் இறந்துவிட்டதை உறுதிப்படுத்துவதற்குச் சான்றாக அவர்களின் மரண அத்தாட்சிப் பத்திரத்தை தாக்கல் செய்யாமல் அவ்விருவரும் யுத்தத்தில் மரணமடைந்துவிட்டனர் எனப் பாதுகாப்பு அமைச்சிலிருந்து அரச புலனாய்வுத்துறை பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரணவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணம் ஒன்றையே சட்டமா அதிபர் சமர்ப்பித்துள்ளார்.

(வழக்குத் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பிரஜீவன் ராம்

# இலங்கைக்குள் தமிழ்த்தேசியம்

## வரலாறும் அதன் பயணப்பாடும் 9

சமஷ்டிக் கோரிக்கையை முன்னிறுத்திய தமிழரசுக் கட்சியினர் ஏன் பண்டா- செல்வா, டட்லி - செல்வா உடன்படிக்கைகளை ஏற்றுக்கொள்ளத் தயாரானார்கள்? என்பது பற்றிய வாதப் பிரதிவாதங்கள் இன்றுவரை முன்வைக்கப்பட்டே வருகின்றன. குறிப்பாக இன்றைய இளம் தலைமுறையினர் இவ்வாறான கேள்விகளை அதிகம் முன்வைக்கின்றனர்.

இந்தக் கேள்விகளுக்கான பதிலை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு அன்றைய கால அரசியல் சூழ்நிலை பற்றிய புரிதலை ஏற்படுத்துவது அவசியமானது. இந்தத் தீவில் பிரித்தானியரால் ஜனநாயகக் கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், அதிகாரம் என்பது சட்டத்துறையில் இருந்தே உருப்பெற்றது. சட்டத்துறை மூலம் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள், யாப்பு வடிவில் பாதுகாப்பட்டன , அந்தச் சட்டங்களை நிறைவேற்ற நிர்வாகத்துறை உருவாக்கப்பட்டது.

அனைத்து மக்களுக்கும், சம உரிமைக்கான வாய்ப்பினை வழங்கவும், யாப்பின் பிரகாரம் உருவாக்கப்பட்ட சட்டங்கள் மீறப்படும் போது, சட்ட மீறல்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதற்காகவும் நீதித்துறை உருவாக்கப்பட்டது. பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட ஜனநாயகக் கோட்பாட்டை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு அந்தச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு வாழ எப்போது தயாரானார்களோ, அப்போது முதல் தமிழர்களின் தாயகப் பிரதேசமான யாழ்ப்பாண இராச்சியம் உள்ளிட்ட வடக்கு - கிழக்கு பிரதேசம் பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட இலங்கையின் ஒன்றிணைந்த பகுதியாக உருமாற்றம் பெற்றுவிட்டது.

### தமிழர் தாயக அங்கீகரிப்பும் சிங்களத்தின் தயக்கமும்

இலங்கைத் தீவில் தமிழ்மக்கள் ஒரு தனித்துவமான இனம், தமிழரின் பூர்வீக தாயகப்பகுதி வடக்கு - கிழக்கு என்பதை சேர் பொன். அருணாசலம் போன்ற தமிழ்த் தேசியவாதிகள் வலியுறுத்திக் கூறினாலும்,யாப்பு ரீதியாக தமிழர் தாயகபிரதேசம் உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே யாப்பு ரீதியாக ( சோல்பரி யாப்பு ) சிங்கள அரசாங்கம் தமிழர் தாயக நிலப்பரப்பை அங்கீகரிக்க வேண்டும் எனத் தந்தை செல்வா போன்ற தமிழ்த் தேசியவாதிகள் சிந்தித்தனர்.

அவ்வாறு, தமிழர் தாயகப்பகுதியை சிங்கள அரசாங்கம் யாப்பு ரீதியாக ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைப்பதற்கு பூரண உரித்துடையவர்கள் என்பது யாப்பு ரீதியாக அங்கீகரிப்படும் என அவர்கள் கருதினர். இதன் அடிப்படையிலேயே பிராந்தியசபைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பண்டா- செல்வா உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்டது. எனினும் இந்த உடன்படிக்கை சிங்கள - பௌத்த தேசியவாதிகளின் கடும் எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்டது.

பண்டா - செல்வா உடன்படிக்கை வலுவான உடன்படிக்கை என்பதனை டட்லி - செல்வா உடன்படிக்கையின் போது டட்லியும் சிங்களத் தேசியவாதிகளும் முன்வைத்த கட்டுப்பாடுகளில் இருந்து எம்மால் புரிந்து கொள்ள முடியும். டட்லி-செல்வா உடன்படிக்கையில் முக்கியமான கட்டுப்பாடாக பண்டா-செல்வா உடன்படிக்கையில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்த பிராந்திய சபைகளுக்கு பதிலாக மாவட்ட சபைகளே உருவாக்கப்படும் என்று டட்லி சேனநாயக்கா திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

அதற்கான பிரதான காரணம் சிங்களத்தேசியவாதிகளும், டட்லியும் 'பிராந்திய' என்ற சொல் தெளிவாக சுயாட்சியை வெளிப்படுத்துகின்றது என நம்பினர். எனவே பிராந்தியசபை உருவாக்கத்தை எதிர்த்தனர். மாறாக மாவட்டசபைகளை உருவாக்கச் சம்மதித்தனர் . இதில் டட்லியின் சூழ்ச்சியும் மறைந்திருந்தது. மாவட்ட சபை உருவாக்கம் மூலம் தமிழரின் தாயக



நிலப்பரப்பான வடக்கு - கிழக்கு பிரதேசங்களை மாவட்ட ரீதியாக பிளவுபடுத்தலாம் என அவர் திட்டமிட்டார். இதை நன்கு அறிந்திருந்தும் தந்தை செல்வநாயகம் இந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளத் தயாரானார். இந்தமுடிவை அவர் மேற்கொள்ள பின்வரும் காரணங்கள் செல்வாக்கு செலுத்தி இருக்கலாம்.

### தந்தையின் தந்திரோபாய நகர்வு

முதலாவது, தமிழ்மக்களால் நீண்டகாலம் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டங்கள், சிங்கள அரசாங்கத்தால் திட்டமிட்டு கொடூரமாக நசுக்கப்பட்டமை . இதனால் போராட்டத்தினால் துவண்டு கிடந்த தமிழ் மக்களின் குறைந்தபட்ச உரிமைகளைப் பெற்றுக்கொள்ள டட்லி- செல்வா உடன்படிக்கை துணைபுரியும் என தந்தை செல்வா சிந்தித்திருக்கலாம்.

இரண்டு, டட்லியுடனான பேரம் பேசுகின்ற அரசியல் மூலம், மொழி ரீதியாக அங்கீகரிக்க மறுத்த தமிழர் தாயகப் பகுதியை, இந்து மத ரீதியான பிரதேச அங்கீகாரத்தோடு பெற்றுக்கொள்ள தமிழரசுக் கட்சியினர் முயன்றனர்.

இதற்குச் சிறந்த சான்று கோணேஸ்வரர் கோயில் சூழலைப் புனிதப் பிரதேசமாக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையே. டட்லி - செல்வா உடன்படிக்கையின் பயனாக பெற்றுக்கொண்ட உள்ளூராட்சி அமைச்சர் பதவி மூலம் மு. திருச்செல்வம் "திருக்கோணேஸ்வரக் கோவில் அமைந்துள்ள பிரட்றிக் கோட்டை வளாகத்தை இந்துக்களுக்குரிய புனிதப் பிரதேசமாக அறிவிக்கவேண்டும்" என டட்லியிடம் கோரிக்கை முன்வைத்திருந்தார். டட்லியும் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவளித்தார். ஆனால் தீவிர சிங்கள- பௌத்த தேசியவாதிகளின் பார்வையில் திருக்கோணேஸ்வரப்பகுதி புனிதப் பிரதேசமாக அறிவிக்கப்படுவது பௌத்த - சிங்களக் கோட்பாட்டை வலுவிழக்கச் செய்யும் எனக் கருதினர்.

இந்துக்களின் புனிதப் பிரதேசமாக திருகோணேஸ்வரம் அங்கீகரிக்கப்பட்டால், சிங்கள - பௌத்தர்களுக்கே இலங்கை சொந்தமானது என்ற நிலைமையை மாற்றியமைத்துவிடும். இந்துக்கள் அல்லாதோர் இந்துக்களின் புனிதப் பிதேசத்தில் ஆதிக்கம் செலுத்த முடியாத சூழ்நிலையை உருவாக்கும் என அவர்கள் அஞ்சினர். எனவே இந்தக் கோரிக்கைக்கு எதிராக தீவிர சிங்கள - பௌத்த தேசியவாதிகள் தமது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்த ஆரம்பித்தனர் . இதனால் டட்லி - சேனநாயக்கா இந்தக்கோரிக்கையை நிறைவேற்றாமல் பின்வாங்கினார்.

### சூழலும் உடன்படிக்கைகளும்

இந்த வரலாற்று நிகழ்வுகளை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது ஓர் உண்மை புலப்படும், இன்றைய தமிழ் இளையோருக்கு டட்லி- செல்வா மற்றும் பண்டா - செல்வா உடன்படிக்கைகள் வலுக்குறைந்த உடன்படிக்கைகளாகத் தோற்றமளிக்கலாம். ஆனால் அன்றைய அரசியல் சூழ்நிலையில் யூத நாடான இஸ்ரேலை உருவாக்க முன்னர் பிரித்தானியருடன் யூத ஜீயோனிசவாதிகளால் இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட பால்ஃபர் உடன்படிக்கைக்கு ஒப்பான உடன்படிக்கைகளாகவே தீவிர சிங்கள- பௌத்த தேசியவாதிகள் இவ்விரு உடன்படிக்கைகளையும் கருதினர். அதன் காரணமாகவே, இந்த உடன்படிக்கைகளைக் கடுமையாக எதிர்த்தனர். இந்த உடன்படிக்கைகளை நிறைவேற்றாமல் தடுத்தமை மூலம் தந்தை செல்வநாயகத்தின் தமிழீழக் கனவு தர்க்கப்பட்டது என பேரினவாதிகள் முழக்கம் இட்டனர்.

இங்கு வேடிக்கை என்னவென்றால், பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டும் செயலைப் போல தமிழ் - சிங்கள இன முரண்பாடுகளைத் தோற்றுவித்தவர்களும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு எனக் கூறி உடன்படிக்கைளை மேற்கொண்டவர்களும், அந்த உடன்படிக்கைகள் தமிழீழத்தை அமைப்பதற்கான முதற்படி என்ற கருத்தியலை விதைக்க துணை புரிந்தவர்களும் இதே சிங்களத் தலைமைகள் என்பதுதான்.

### ஏழரைச்சனி ஆட்சியில் தமிழரசுக் கட்சி

அன்றைய அரசியல் சூழ்நிலையில், தமிழரசுக் கட்சியினர் டட்லி-செல்வா உடன்படிக்கை நிறைவேற்றப்படாத நிலையிலும் 'தேசிய அரசாங்கத்திலிருந்து' வெளியேறாமல், 'விமர்சனத்துக்கு உட்பட்ட ஆதரவை ' வழங்கினர். இதனால் குறிப்பிட்ட சில தமிழ்த்தேசியவாதிகளின் எதிர்மறையான விமர்சனங்களுக்கும் உள்ளாகும் நிலை தந்தை செல்வநாயகத்துக்கு நேரிட்டது. எனினும் அன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழரசுக் கட்சியின் இந்தமுடிவு காலத்தின் கட்டாயம் என்பதை தந்தை செல்வநாயகம் வலுவாக நம்பினர். அன்றைய அரசியல் களநிலைவரப்படி, ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கு சிங்கள மக்கள் மத்தியில் வலுவிழந்திருந்தது.

குறிப்பாக டட்லி - செல்வா உடன்படிக்கை, திருக்கோணேஸ்வரப் பகுதியை இந்துக்களின் புனித பிரதேசமாக மாற்ற முற்பட்டமை சார்ந்த சர்ச்சைகளுடன், ஐக்கிய தேசியக் கட்சி முதலாளிகளின் நலன்களை பாதுகாக்கும் செல்வந்த அதிகார வர்க்கத்தின் கட்சி என்ற கருத்தியலும் இடதுசாரிகளால் விதைக்கப்பட்டிருந்தது. அதே சமயம், சிறிமாவோ பண்டாரநாயக்கா சோல்பரி யாப்பின் குறைகளைச் சுட்டிக்காட்டி , சுதந்திரத்தின் பின்னரும் பிரித்தானிய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே இலங்கை மக்களின் இறைமை இருப்பதை தெளிவாக சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறினார். 'எனவே சோல்பரி அரசியல் யாப்பை ஒழித்து இலங்கை மக்களின் இறைமை அதிகாரத்தினை இலங்கையர்களாகிய நாம் (சிங்கள மக்கள்), புதிய அரசியல் யாப்பின் மூலம் மீள் கட்டுமானம் செய்யவேண்டும்' என்னும் பிரசாரத்தை சிறிமாவோ முன்னெடுத்தார். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இவ்வாறான கருத்துகள் சிங்கள மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் கொன்றார்கள் ஆர்த்தியை?

## புதுச்சேரியை உலுக்கிய மர்மம்

நி.பிரதிகா

2024 மார்ச் 5 ஆம் திகதி.
இந்தியாவின் புதுச்சேரி மாநிலம்.
சோழபுரம் பகுதியே சோபையிழந்து , சோகத்தில் மூழ்கிக்கிடந்தது.
அங்குள்ளகால்வாய்ஒன்றில்சந்தேகத்துக்கிடமான சாக்குமூட்டை போல் ஏதோ ஒன்று அந்தப்பகுதியால் செல்வோரின் கண்களில் தென்பட்டது. அதிலிருந்து துர்நாற்றம் வீச மக்களுக்கு சந்தேகம் வலுத்தது. இது குறித்து உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சற்றைக்கெல்லாம் 'சைரன்' ஒலியோடு வந்த பொலிஸ் ஜீப்பிலிருந்து 'திபு திபுவென' குதித்த பொலிஸார், கால்வாய்க்குள் தென்பட்ட மூடையை நெருங்கி, அதன் ஒரு பக்கத்தை மெல்லத் திறந்தனர்.
உள்ளே -
கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் ஒரு சிறுமியின் சடலம்.
'மூன்றுநாள்களுக்கு முன்னர் காணாமற் போன சிறுமியின் சடலமாக இருக்குமோ?'
பொலிஸாருக்கு பொறி தட்டியது. தன் மகளைக் காணவில்லை என்று புகார் கொடுத்த தந்தையை அழைத்து வந்தார்கள்.
கண்ணீரோடு, கடவுளைப்பிரார்த்தித்துக்கொண்டு அருகிலே சென்ற அந்தத் தந்தை துணியை விலக்கி, சடலத்தைப் பார்த்தார். அடுத்தகணமே,
"ஐயோ என்ர புள்ள"
அவரின் ஓலத்தில் அந்தப்பகுதியே அதிர்ந்தது. தலையில் அடித்து அழுதபடி கீழே வீழ்ந்தார். மூன்றுநாள்களுக்கு காணாமற்போன வெறும் ஒன்பதே வயதான, ஆர்த்தி என்ற சிறுமி சடலமாக மீட்கப்பட்ட செய்தி சமூக வலைத்தளங்களூடாகத் காட்டுத்தீபோல் எங்கும் பரவியது. காணாமற் போன சிறுமியை விரைவாகக் கண்டுபிடிக்குமாறு போராட்டம் நடத்திக்கொண்டிருந்த மக்களுக்கு அந்தச்செய்தி எரியும் நெருப்பில் எண்ணெயை வார்த்தது. புதுச்சேரி எங்கும் போராட்டங்கள் வெடித்தன. சடலத்தை மருத்துவமனைக்குக் கொண்டுசென்ற அம்புலன்ஸும் வழிமறிக்கப்பட்டது. 'ஆர்த்தியை இந்த நிலைக்கு ஆளாக்கியவர்களைப் பிடித்து எங்கள் கைகளில் ஒப்படைத்துவிட்டு சடலத்தைக் கொண்டுசெல்லுங்கள்' என மக்கள் கூச்சலிட்டனர். ஒரு வழியாக நெருக்கடியை நகர்த்திக்கொண்டு சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பொலிஸார் அனுப்பி வைத்தனர். அங்கு திரண்டிருந்த மக்கள், முத்தியால்பேட்டை மணிக்கூட்டுக் கோபுரம் அருகே சாலை மறியலில் ஈடுபட்டனர். அவர்களை அப்புறப்படுத்த முயன்ற பொலிஸாருக்கும், மறியலில் ஈடுபட்டவர்களுக்கும் இடையே ஏற்பட்ட தள்ளுமுள்ளு தடியடி வரை சென்றது.
நாடாளுமன்றத் தேர்தலுக்காக புதுச்சேரிக்குப் பாதுகாப்புப் பணிக்கு வந்த மத்திய சி.ஐ.எஸ்.எப். படையினர் நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக அவசர அவசரமாக மறியல் நடக்கும் இடத்துக்கு விரைந்தனர். அவர்களைக் கண்டதும் மக்களின் ஆத்திரம் இன்னும் அதிகரித்தது. அங்கிருந்து நகர மக்கள் மறுத்தனர். புதுச்சேரியே பரபரத்தது.
புதுச்சேரி முதலமைச்சர் நேரடியாக அங்கு வந்தார். போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்தினார்.
'மிக விரைவில் குற்றவாளிகளைப் பொலிஸாரின் உதவியுடன் பிடித்துவிடுவோம்' என வாக்குறுதி வழங்கிய பின்னரே, போராட்டக்காரர்கள் அங்கிருந்து நகர்ந்தனர்.


### விளையாடப் போனாள்; வரவேயில்லை

சோழபுரத்தில் வசித்துவரும் ஓட்டுநர் பணி செய்யும் நாராயணனுக்கும் வீட்டுவேலை செய்யும் மைதிலிக்கும் 2 ஆவது மகளாகப் பிறந்தவள் தான் ஆர்த்தி. வயது 9. பக்கத்திலிருந்த அரசுப் பள்ளியொன்றில் கல்விகற்று வந்த ஆர்த்தி படிப்பிலும், விளையாட்டிலும் நல்லகெட்டிக்காரி. எப்போதும் துரு துருவென உற்சாகமாக இருப்பாள்.
அன்று சனிக்கிழமை. பள்ளிவிடுமுறை நாள். விடுமுறை நாளை விளையாட்டோடு கழிக்கவேண்டும் என்ற ஆர்வத்துடன் மதியம் 12.30 மணியளவில் வேகமாக சாப்பாட்டை உண்டுமுடித்துவிட்டு, அம்மாவிடம் சொல்லிவிட்டு துள்ளி ஓடினாள் அந்த மான்குட்டி. ஆனால் தனக்காக இரு வேடர்கள் வலைவிரித்துக் காத்திருக்கிறார்கள் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்?
நாராயணன் ஓட்டுநர் என்பதால் காலையில் நேரமாகவே வேலைக்குச் சென்றுவிடுவார். மைதிலி வீடுகளுக்குச் சென்று கூலி வேலை செய்பவர். அன்றும் ஆர்த்தி விளையாடச் சென்ற பின்பு வீட்டிலிருந்த மூத்த மகளிடம் கூறிவிட்டு மைதிலி வேலைக்குச் சென்று விட்டார். வேலைகளை முடித்துக் கொண்டு மதியம் தாண்டி, 2.30 மணியளவில் வீடுதிரும்பி வந்து பார்த்த போதுதான், விளையாடச்சென்ற ஆர்த்தி இன்னமும் வீட்டுக்கு வராததை அறிந்தார். அருகில் உள்ள இடங்களில் ஆர்த்தியைத் தேடத் தொடங்கினார். ஆனால் அவளைக் காணோம்.
'சரி, சற்றுத் தூரமாகச் சென்று விளையாடிக்கொண்டிருப்பாள் ,வந்துவிடுவாள்' என நினைத்துக் காத்திருந்தாள் மைதிலி. எங்கு விளையாடச்சென்றாலும் பொழுது சாய்வதற்குள் வீட்டுக்கு ஆர்த்தி வந்துவிடுவது வழக்கம். ஆனால் அன்றைக்கு நேரம் மட்டும் நகர்ந்ததே தவிர ஆர்த்தி வரவில்லை. மைதிலிக்கு பயம் அதிகரிக்கத் தொடங்கியது. வீட்டைச் சுற்றிக் குடியிருந்தவர்களிடமும், உறவினர்களிடமும் சென்று விசாரித்தாள். எவருக்கும் எதுவும் தெரிந்திருக்கவில்லை. உடனடியாகக் கணவர் நாராயணனுக்கு தொலைபேசி மூலம் தகவலைச் சொன்னாள். வீட்டுக்கு விரைந்து வந்த நாராயணனோடு சேர்ந்து அவரது நண்பர்கள் தூர இடங்களுக்குச் சென்று தேடத்தொடங்கினர். எங்கு தேடியும் ஆர்த்தி கிடைக்காமையால் மாலை 6.30 மணியளவில் அருகிலிருந்த முத்தையார்பேட்டை காவல் நிலையத்தில் 'எங்கள் மகளைக் காணவில்லை' என்று மைதிலியும், நாராயணனும் முறைப்பாடு கொடுத்தனர்.

பொலிஸார் விசாரணைகளில் துரிதமாக இறங்கினர். தற்போது கடத்தல் காரர்கள் அதிகரித்திருப்பதால் முதலில் அந்தக்கோணத்திலேயே விசாரணைகள் தொடங்கப்பட்டன. சோழபுரத்திலிருந்த அனைத்து சி.சி.ரி.வி. கமராக்களும் அலசப்பட்டன. சோழபுரத்திலிருந்து அருகிலிருந்த கிளிச்சன்மேடு நோக்கிச் செல்லும் வீதியிலே ஆர்த்தி நடந்து செல்லும் காட்சி அதில் மட்டுமே பதிவாகியிருந்தது. ஏனைய கமராக்கள் பழுதடைந்திருந்தமையால் பொலிஸார் அருகிலிருந்த பிரதேசங்களிலுள்ள கமராக்களையும் ஆராய்ந்தனர். இதனால் சோழபுரம், கிளிச்சன்மேடு ஆகிய பகுதிகளை விட்டு ஆர்த்திவெளியேசெல்லவில்லைஎன்பதைபொலிஸார் உறுதிசெய்து கொண்டனர். சோழபுரத்திலுள்ள வீடுகளை பொலிஸார் சல்லடையிட்டுச் சோதனையிட்டனர். நேரம் கடந்தது. இருள் சூழ்ந்தது. ஆனால் ஆர்த்தி மட்டும் கிடைக்கவில்லை. மூன்றுநாள்களின் பின்னர் சடலமாகத்தான் வீட்டுக்குத் திரும்பி வந்தாள்.

### என்ன நடந்தது?

உடற்கூற்றுப்பரிசோதனையின் பின்னர் வெளியான மருத்துவ அறிக்கை ஆர்த்திக்கு நேர்ந்த கொடூரத்தை ஆதாரத்தோடு முன்வைத்தது. ஆர்த்தியின் கழுத்து நெரிக்கப்பட்டு, அடித்து துன்புறுத்தப்பட்டிருந்தாள். அவளின் பெண் உறுப்பு உட்பட உடலில் பல இடங்களில் காயங்கள். ஆர்த்தி பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்ட பின்னரே கொல்லப்பட்டாள் என்பது உறுதியானது. இவ்வளவு கொடூரமாக ஒரு சிறுமியைக் கொல்வதானால் அது நிச்சயமாக சுயநினைவோடு செய்திருக்க முடியாது. பொலிஸாரின் சந்தேகம் அந்தப் பகுதியில் நடமாடும் போதைப்பொருள் பாவனையாளர்கள் மீது திரும்பியது. சிறுமியின் வாழ்விடத்தை அண்மித்த பகுதிகளில் போதைப்பொருளை நுகர்ந்தநிலையில் நடமாடிய 7 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒரு இளைஞனின் கையில் நகக்கீறல் இருக்கவே. அவனை 'விசேடமாக' பொலிஸார் கவனித்தனர். அந்தக் கவனிப்புக்கு நல்ல பலன் கிடைத்தது.
கருணாஸ் என்ற அந்த 19 வயதுக் கொடூரன் நடந்ததை ஒப்புவிக்கத் தொடங்கினான். அந்த வாக்குமூலத்தில் பல அதிர்ச்சித் தகவல்கள் வெளிவந்தன. கருணாஸ் மட்டுமல்லாது இன்னொரு கொடூரனும் சேர்ந்தே ஆர்த்தியைக் கொன்றனர் என்ற தகவலும் அம்பலமானது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஓநாய்களின் வேட்டை**

ஆர்த்தி வாழும் அதே பிரதேசத்தைச் சேர்ந்தவன் தான் 54 வயதான விவேகானந்தன் . அவன் தனது மனைவி, பிள்ளைகளைப்பிரிந்து தனியே வாழ்ந்து வந்துள்ளான். மது, கஞ்சா போன்ற போதைப்பொருள்களுக்கும் அவன் அடிமை . இந்தச் சமயத்தில் தான் அதே பகுதியில் பெயின்ற் அடிக்கும் வேலையைச் செய்து வந்த 19 வயதுடைய கருணாஸுக்கும் விவேகானந்தனுக்கு நட்பு ஏற்பட்டுள்ளது. இருவரும் சேர்ந்து போதைப்பொருள்களைப் பயன்படுத்துவதோடு ஓரினச்சேர்க்கையிலும் ஈடுபட்டு வந்துள்ளனர். தெருவில் விளையாடும் ஆர்த்திக்கு அடிக்கடி சொக்லேட் வாங்கிக்கொடுத்து அவளோடு பழக்கமாகியுள்ளான் கருணாஸ் அன்றைக்கு ஆர்த்தி வீதியிலே விளையாடிக்கொண்டிருந்தாள். கஞ்சாவை நுகர்ந்த போதைமயக்கத்தோடு வந்த கருணாஸுக்கு ஆர்த்தியைக் கண்டதும் சபல எண்ணம் தலைதூக்கியது.

'ஐஸ்கிறீம் வாங்கித் தருகிறேன், வா' என்று அவன் ஆசை காட்ட, அதன் பின்னுள்ள விபரீதத்தைப் புரிந்துகொள்ளாத ஆர்த்தி அவனோடு சென்றாள்.

விவேகானந்தனின் பாழடைந்த வீட்டுக்கு ஆர்த்தியை அழைத்துச் சென்று, அவளைச் சீரழிக்க முயன்றான். நடப்பதை சரிவர உணரமுடியாத ஆர்த்தி அங்கிருந்து தப்பிக்க நினைத்து பலமாகப் போராடினாள். அப்போதுதான் வெளியில் இருந்து வீட்டுக்குள் வந்தான் 59 வயதான, மனித மிருகம் விவேகானந்தன். ஆர்த்தியை யார் முதலில் சீரழிப்பது என்று இருவரும் சண்டையிடத் தொடங்கினர். ஆபத்தை உணர்ந்த ஆர்த்தி 'அப்பா, அப்பா' என்று கத்தத் தொடங்கினாள். அவளது குரல் வெளியே கேட்டுவிடுமோ என்ற பயத்தில், அவளை இருவரும் பலமாக அடித்தனர். அந்த அடியால் ஆர்த்தி மயங்கி விழுந்தாள். பின்னர் அவளின் கழுத்தை வேட்டித்தலைப்பால் நெரித்து, அவள் மூச்சடங்கச் செய்தனர். பின்னர் அவளின் கை,கால்களைக் கட்டினர். வேட்டி, பாய், பொலித்தீன் என்பவற்றால் அவளது உடலைச் சுற்றிவிட்டு, ஒரு சாக்குப்பையில் போட்டுக் கட்டி வீட்டின் ஒரு மூலையில் ஒளித்து வைத்துவிட்டனர். பின்னர் வெளியே வந்து தாமும் பொலிஸாரோடு சேர்ந்து ஆர்த்தியைத் தேடுவது போல பாசாங்கு செய்துவிட்டு, எல்லோரது கவனமும் சிதறியிருந்த நேரமாகப் பார்த்து கால்வாய்க்குள் ஆர்த்தியின் சடலம் இருந்த மூடையை எறிந்துவிட்டு வந்திருக்கிறார்கள். இறுதியில் ஆர்த்தியின் நகக்கீறல் அந்தக்கொலைகார ஓநாய்களைக் காட்டிக் கொடுத்துவிட்டது. கருணாஸின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு விவேகானந்தனும் கைது செய்யப்பட்டு விட்டான். இப்போது இரண்டு மிருகங்களும் சிறைக்குப் பின்னே தள்ளப்பட்டு விட்டன.

பெண் பிள்ளைகளைப் பெறுவது வரம் என்பார், இன்று அதுவே சாபமாகிவிட்டது. ஆர்த்திக்கு நேர்ந்த அநியாயம் இனிமேல் வேறெந்தப் பெண்பிள்ளைக்கும் நேரக்கூடாது என்று பிரார்த்திப்பதும் தவிர வேறு என்ன முடியும் நம்மால்?



வன்னிக்காவலன் என்ற அடைமொழியுடன் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவசிதம்பரத்துக்கு சிலர் சிலை அமைத்துள்ளனர். உண்மையைச்சொல்லப்போனால் வன்னிக்காவலன் என்ற பட்டம் சுந்தரலிங்கத்துக்கே பொருத்தமானது.

# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

இலங்கை அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஓர் ஆளுமை. துரதிர்ஷ்டவசமாக சுந்தரலிங்கத்தின் சாதனைகள் பற்றி அரசியல் விஞ்ஞானம் போதிக்கும் பேராசிரியர்களுக்கோ, அரசியல் ஆய்வாளர்களுக்கோ கூடத் தெரியாமலிருப்பது எமது அரசியல் வரலாற்று ஆய்வாளர்கள் விரிவுரையாளர்களின் அறியாமையையே எடுத்துக்காட்டுகிறது. அல்லது சுந்தரலிங்கம் வேண்டுமென்றே தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் இருட்டடிப்புச்செய்யப்படுகிறார். இந்த இடத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் சுந்தரலிங்கத்தைப்பற்றி கூறிய விடயத்தை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

'சுந்தரலிங்கம் தனி ஒருவராக நின்று அரசியல் செய்தார். அத்துடன் சுந்தரலிங்கத்தின் வாரிசுகள் எவரும் அரசியலில் ஈடுபடவில்லை. இதனால் ஜீ. ஜீ. க்கு கிடைத்த தமிழர்களின் தலைவன் என்ற அடைமொழியோ செல்வநாயகத்துக்கு கிடைத்த தந்தை என்ற அடைமொழியோ சுந்தரலிங்கத்துக்கு கிடைக்கவில்லை.'

அண்மையில் வன்னிக்காவலன் என்ற அடைமொழியுடன் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவசிதம்பரத்துக்கு சிலர் சிலை அமைத்துள்ளனர். உண்மையைச்சொல்லப்போனால் வன்னிக்காவலன் என்ற பட்டம் சுந்தரலிங்கத்துக்கே பொருத்தமானது. அடங்காத்தமிழன் சுந்தரலிங்கத்தின் சாதனைகளில் எனக்குத்தெரிந்த சிலவற்றை இந்தச் சிறிய தொடர் மூலம் உதயன் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விளைகின்றேன்.

சுந்தரலிங்கத்தைப்பற்றி இரண்டு முக்கியமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இலங்கை சுதந்திரமடைந்த வேளையில் பிரிட்டனுக்குச் சென்று ஒற்றையாட்சிக் கட்டமைப்பை ஏற்றுக் கொள்வதாக தமிழர்கள் சார்பில் சுந்தரலிங்கம் ஒப்பமிட்டது முதல் தவறு. இரண்டாவது, மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் ஆலயப்பிரவேச போராட்டம் நிகழ்ந்த போது ஒடுக்கப்பட்ட சாதியினரை ஆலயத்தினுள் அனுமதிக்கக்கூடாது என தடுப்புப்போராட்டத்தில் சுந்தரலிங்கம் ஈடுபட்டமை அடுத்த தவறு. இவற்றில் சிலவற்றுக்கு பின்னாளில் சுந்தரலிங்கம் மன்னிப்பு கோரியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக சுந்தரலிங்கத்தின் நிலைப்பாட்டுடன் எனக்கும் உடன்பாடு இல்லையென்பதை ஆரம்பத்திலேயே தெரிவித்துக்கொள்கிறேன். எனினும் சுந்தரலிங்கத்தின் சாதனைகளைப் பதிவு செய்யவேண்டிய வரலாற்றுக்கடமை என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என நம்புகிறேன்.

சுந்தரலிங்கம் உரும்பிராயிலுள்ள செல்லப்பா - மீனாட்சி தம்பதிகளுக்கு 19.08.1895 அன்று மூன்றாவது மகனாகப் பிறந்தார். செல்லப்பா - மீனாட்சி தம்பதிகளின் புதல்வர்கள் ஐவரும் இலங்கை அரசாங்கத்தில் உயர் பதவிகளை அலங்கரித்தமையால் சுந்தரலிங்கத்தையும் சகோதரர்களையும் பொதுவாக பஞ்சலிங்கங்கள் என அழைப்பர். சுந்தரலிங்கத்தின் மூத்த சகோதரன் பஞ்சலிங்கம் பிரபல மருத்துவர். இரண்டாமவர் நாகலிங்கம் உயர்நீதிமன்ற நீதிபதியாகவும், பதில் ஆளுநராகவும் பணிபுரிந்தவர். மூன்றாமவர் சுந்தரலிங்கம், நான்காமவர் தியாகலிங்கம் நீதிபதியாகப் பணி புரிந்தவர். கடைசி மகனான அமிர்தலிங்கம் மீன்பிடித்திணைக்களப் பணிப்பாளராக கடமையாற்றியவர். இவர்களில் நான்காமவரான தியாகலிங்கத்தைப்பற்றி அண்மையில் வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் கூறிய ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன். 1

சிறிமாவோ அம்மையார் பிரதமராக பதவி வகித்த காலத்தில் ஒரு முறை தன்னை வந்து சந்திக்கும்படி தியாகலிங்கத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார். அதற்கு தியாகலிங்கம் 'ஒரு நீதிபதி வந்து உங்களை சந்திப்பது முறையல்ல, நீங்கள் வந்து சந்திப்பது தான் முறை' எனத் தெரிவித்திருந்தார். இந்த விடயத்தை விக்னேஸ்வரன் முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போது கூறியிருந்தார். .

சுந்தரலிங்கம் தனது ஆரம்பக்கல்வியை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை கொழும்பு சென். ஜோசப் கல்லூரியிலும் பூர்த்தி செய்தார். இலங்கை வரலாற்றில் இரசாயனவியல் பாடத்தில் அதிவிசேட சித்தி பெற்ற முதலாவது மாணவன் சுந்தரலிங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. 1914 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பெற்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கணித பாடத்தில் முதலாம் வகுப்பில் சித்தியடைந்ததுடன் கணிதத்துறையில் பட்ட மேற்படிப்பையும் மேற்கொண்டார். லண்டனில் தங்கியிருந்த காலத்தில் குறுகிய காலத்தில் சட்டக் கல்வியையும் கற்று பரிஸ்டர் பட்டம் பெற்றார். நாடு திரும்பிய சுந்தரலிங்கம் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியின் (அப்போது இலங்கையில் பல்கலைக்கழகம் உருவாகவில்லை) முதலாவது கணிதப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். பின்னர் ஆனந்தாக் கல்லூரி அதிபராகவும் கடமையாற்றினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
14 ஏப்ரல் 2024



# புரட்சிக்காரி தாத்திரிக்குட்டி!

○ கோகுலராகவன்

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கேரளத்தின் வரலாற்றில் புரட்சி ஏற்படுத்திய புரட்சிகர இளம்பெண்ணான தாத்திரிக் குட்டியின் கதையை போனவாரம் சொல்லியிருந்தேன். தாத்திரிக்குட்டியின் சரிதத்துக்கு பின்னுள்ள சூழமைவை சொல்லவேண்டியது அவசியமாகின்றது. அப்போதுதான் தாத்திரிக்குட்டியின் செயலுக்கான முழுமையான அர்த்தத்தை நீங்கள் புரிந்து கொள்ளமுடியும்.

18 ஆம் நூற்றாண்டிலும் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கேரளாவில் நம்பூதிரிகள் என்ற சமூகக் குழுவின் அதிகாரமே தலை விரித்தாடி யது. அங்கு நம்பூதிரிகள் வைத்ததுதான் சட்டம்.

கேரளாவை ஆண்ட கொச்சி இராஜாவும் அவர்கள் சொன்னதைதான் செய்யவேண்டும். நம்பூதிரிகள் தாம் நினைத்தைச் சட்டமாக்க அதிகாரம் இருந்தது. அரசர்கள் இவர்களையே குருவாகவும், ஆலோசகர்களாகவும் கொண்டிருந்ததே இதற்குக் காரணம். யுத்த வெற்றிகளுக்கு காரண கர்த்தா நம்பூதிரிகள் தான் என அரசர்கள் கருதியபடியால் அவர்களுக்கு ஏராளமான நில புலன்களை அள்ளிக் கொடுத்தனர். இதனால் நாளடைவில் நம்பூதிரிகள் பெரிய நிலச்சுவாந் தர்களாக மாறினர்.




இந்த நிலபுலன்கள், சொத்துகள் கைமாறக்கூடாது என்ற காரணத்தால் குடும்பத்தில் மூத்த மகன் மட்டும் திருமணம் செய்யலாம் என்ற சட்டத்தை அவர்கள் வைத்திருந்தனர். மற்ற ஆண்பிள்ளைகள் திருமணத்தை நினைத்தும் பார்க்க முடியாது. ஆனால் வேறு சமூகங்களில் உள்ள பெண்களோடு தொடர்பைப் பேணலாம். அந்தப் பெண்களுக்கோ அவர்களின் பிள்ளைக ளுக்கோ சட்ட உரிமை, சொத்துரிமை கிடையாது . இந்தச் சட்டத்தால் குடும்பத்தில் முதிர்கன்னிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. இதனால் நம்பூதிரிகள் இன்னுமொரு சட்டத்தைக் கொண்டு வந்தனர்.

மூத்த பிள்ளை எத்தனை திருமணமும் செய்யலாம். எந்த வயதிலும் செய்யலாம் என்பதே அந்தச் சட்டம்.

இதனால் அறுபது வயது நம்பூதிரி இருபது வயது நம்பூதிரிப் பெண்ணையும் திருமணம் செய்து கொள்வார். சில நாள்களில் மூப்பின் காரணமாக அவர் இறந்து போவார். அதன்பின் அந்தப் பெண் காலம் முழுக்க விதவைக் கோலத்தோடு இருக்கவேண்டியதுதான். மறுமணம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

இதனால் நம்பூதிரிகள் வீட்டில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டதால் , தவறான நடத்தையில் அந்தப் பெண்கள் ஈடுபடக்கூடும் என்று பயந்த நம்பூதிரிகள் பெண்கள் வீட்டுக்கு வெளியே வரக்கூடாது என்று பூட்டி வைத்திருந்தனர். அவ்வாறு வீட்டுக்குள்ளேயே வாழ்ந்த நம்பூதிரிப் பெண்கள் "அந்தர்ஜனம்" என அழைக்கப்பட்டனர். (அந்தர் - உள்வீடு) உள்வீட்டில் நடைபெறும் கொடுமைகளை பெண்கள் வெளியே சொல்லமுடியாது . கண் முன்னே நடக்கும் அக்கிரமங்களைக் கண்டும், கேட்டும், அவற்றைத் தாங்கி கொண்டு வாழ்ந்தார்கள்.

அவர்கள் ஏதாவது அலுவலாக, அல்லது நீராட வெளியே வரும்போது தலையை மூடி முக்காடு போடவேண்டும். அத்தோடு கையில் குடை வைத்திருக்க வேண்டும். ஆடவன் வருவதை உணர்ந்தால் குடையால் முகத்தை மூடி விட வேண்டும்.

இதைபோன்று வீட்டு ஆண்கள் பெண்களின் முகத்தைப் பார்க்கக்கூடாது. பார்த்தால் பிரம்படி பெண்ணுக்குத்தான் விழும். பெண் தகப்பனையும் கணவனையும் மட்டுமே தலைநிமிர்ந்து பார்க்கலாம்.

இவ்வாறு அடிமைத்தனம் நிரம்பி இருந்ததை எந்தப் பெண்ணும் எதிர்க்கவில்லை.

இதைவிடக் கொடுமை என்னவென்றால், ஒரு பெண் உடலளவில் தவறு புரிந்திருக்கக்கூடுமென்று கணவன் சந்தேகப்பட்டால் அதுகுறித்து விசாரணை நடத்துமாறு அரசனிடம் கோரிக்கை முன்வைக்கலாம்.

இதற்கே "ஸ்மார்த்த விசாரம்" என்று பெயர் . தவறிழைத்த பெண் இதன் பிரகாரம் "ஐந்தாம் புரை" எனப்படும் தனியறையில் வைக்கப்படுவாள்.

இது வீட்டுக்கு வெளியே இருக்கும் ஒரு தனியிடம். அங்கு யாரும் போகவோ பேசவோ முடியாது. இங்கே வைத்தே அவள் மீதான விசாரணையை "ஸ்மார்த்தன்" என்கிற அரசால் நியமிக்கப்படும் விசாரணை அதிகாரி மேற்கொள்வார்.

ஸ்மார்த்தன் உதவியாளர்கள் புடைசூழ வருவார். விசாரணை மாதக்கணக்கில் நடைபெறலாம். அவர்களுக்குரிய கூலி, சாப்பாடு வழங்க வேண்டும். இவர்களுக்குச் சாப்பாடு கொடுத்தே நொடித்துப்போன நம்பூதிரிகளும் உண்டு.

பெண் இலகுவில் வாய் திறவாள்.

அந்த நாள்களில் ஸ்மார்த்தனின் அணி சாப்பாட்டை ஒரு பிடி பிடித்துவிட்டுப் போய்விடும்.

பெண் குற்றத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் அந்த அறையில் பாம்பு, தேள் விடப்படும். அந்தப் பயத்தில் பெண் குற்றத்தை ஒப்புக்கொள்ளக்கூடும். அல்லது கடிபட்டு இறந்துபோவாள்.

குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டால் அந்தப்பெண்ணை ஊரை விட்டு விலக்கி வைப்பார்கள். சம்பந்தப்பட்ட ஆணுக்கும் இதே தண்டனைதான்.

ஆனால் ஆண் மட்டும் மேன்முறையீடு செய்ய முடியும். பெண்ணுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தது. ஆண்களுக்கான தண்டனை அவ்வளவு கடுமையானது அல்ல. அவன் வேறு ஊருக்கு போய் பிழைத்துக்கொள்வான். ஆனால் பெண் பசியாலும், பாலியல் சுரண்டல்களாலும் ஒதுக்கி வைக்கப்பட்ட இடத்தில் இறந்தே போவாள்.

இத்தகைய நிலை ஏற்பட்டு பாதிக்கப்பட்ட ஒரு பெண் தான் கடந்தவாரம் நாம் பார்த்த தாத்திரி குட்டி . ஆனால் அவள் சுருண்டு போகவில்லை நம்பூதிரிகளின் வறட்டுக் கௌரவம், அதிகாரங்கள் யாவற்றையும் அடித்து துவம்சம் செய்தாள். நம்பூதிரிகள் தப்பினோம், பிழைத்தோம் என தமது வால்களை சுருட்ட வேண்டி வந்தது. இப்போது சொல்லுங்கள் தாத்திரிக் குட்டி அந்தக் காலத்தில் உடலையே ஆயுதமாக்கி, ஓர் அதிகார வர்க்கத்தையே நிர்மூலமாக்கிய பெரும் புரட்சிக்காரியல்லவா.

■

# ஊர்ப்புதினம்



பாகம் 2

○ இராகவன்

எங்கட அம்மம்மாவின்ர தங்கைக்காரி ஒராளிருந்தவா. சிவகாமி எண்டு பெயர். ஊராக்கள் அவாவை 'சிவகாமி அக்காத்தை' எண்டுதான் கூப்பிடுவினம். நாங்கள் சின்னம்மா எண்டு கூப்பிடுவம். அவவும் நல்ல புத்தகப் பிரியை. அவா என்ன செய்வாவெண்டால் பின்னேரங்களில ஏதுமொரு கதைப்புத்தகத்தை எடுத்துத்



தன்ர வீட்டு முன் விறாந்தையிலயிருந்து பெலத்து ஏற்ற இறக்கங்களோட வாசிக்க, அயலட்டையிலயுள்ள பொம்பிளையள் அஞ்சாறு பேர் வட்டமாச் சுத்தியிருந்து கேட்டுக் கொண்டிருப்பினம். சோகமான கவலையான இடங்கள் வரேக்குள்ள சிலர் சீலைத் தலைப்பால மூக்கை சீறுவினம். இதெல்லாம் எனக்கு அப்ப புதினமாயிருக்கும்.

35

இதை மாதிரித்தான் நவண்ணா என்ன செய்வான் எண்டால் என்னை முன்னால இருத்தி வைச்சிட்டு ஒரு புத்தகத்தை வாசிப்பான். அந்தப் புத்தகத்தின்ர முகப்பில எழுதியிருக்கிறதை நான் ஒருநாள் எழுத்துக்கூட்டி வாசிச்சுப் பாத்தன். 'அர்த்தமுள்ள இந்துமதம் முதலாம் பாகம்- கவியரசு கண்ணதாசன்' எண்டிருந்தது. அண்டையிலயிருந்து எனக்கு கண்ணதாசன் அறிமுகமானார். நவண்ணா அதோட விடேல்ல. எனக்குக் கண்ணதாசனைப் பற்றி விலாவாரியாச் சொன்னான். 'கவியரசு எண்டது கண்ணதாசனின்ர பட்டப்பெயர்- கண்ணதாசன் எண்டதும் அவரின்ர சொந்தப் பெயரில்லை. புனைபெயர். அவரின்ர சொந்தப் பெயர் முத்தையா. கண்ணனில சரியான பக்தி எண்டதால தன்ரை பெயரை கண்ணதாசன் எண்டு வைச்சவர். தாசன் எண்டால் அடிமை அல்லது தொண்டன் எண்டு அர்த்தம். கண்ணதாசன் சினிமாப் படங்களுக்குப் பாட்டுகள் எழுதிறதில வலுவிண்ணன். அதாலதான் கவியரசு எண்டு பட்டப்பெயர் வந்தது. அர்த்தமுள்ள இந்துமதம் எண்டது பத்துப் பாகங்கள் கொண்ட பத்துப் புத்தகங்களின்ர தொகுதி " எண்டெல்லாம் எனக்கு எக்கச்சக்கமா விளக்கந்தந்திருந்தான். அதிலையிருந்துதான் எனக்கு கண்ணதாசனில ஒரு ஈடுபாடு வந்தது. நானும் அர்த்தமுள்ள இந்துமதம் பத்துப் பாகங்களையும் சேர்க்கலாமெண்டு அப்பவே வெளிக்கிட்டன். இதில இன்னுமொரு புதுமையையும் நவண்ணா எனக்குக் காட்டினான். அதை வாற கிழமை சொல்லுறன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ மயூ

# பா.ஜ.க.வின் கனவு கானலாகுமா?

இந்தியாவில் நாடாளு மன்றத் தேர்தல்களம் சூடு பிடித்திருக்கின்றது. தேர்தலுக்கு இன்னும் ஒரு சில நாள்களே உள்ள நிலையில் கட்சிகள் தங்கள் இறுதிக்கட்ட பரப்புரைகளில் பரபரப்பாக இருக்கின்றன. தமிழகத்திலும் இந்தத் தேர்தல் பரபரப்புகளுக்குக் குறைவில்லை.

தமிழ்நாட்டில் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்தன முதல் ஏப்ரல் 10 ஆம் திகதி வரை 303.63 கோடி ரூபா மதிப்பிலான பணம் மற்றும் நகை என்பன தேர்தல் ஆணையம் மற்றும் வருமான வரித்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இம்முறை வாக்குகளுக்காகப் பணம் வழங்குவதைத் தடுக்க இந்தியத் தேர்தல் ஆணையகம் கடும் நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. ஆனால் இந்தச் சிக்கலைக் கையாள தேர்தல் ஆணையகம் மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகளைச் சார்ந்திருக்க வேண்டியிருக்கின்றது. மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பதால் பறிமுதல் நடவடிக்கைகள் கட்சிகளால் விமர்சனத்துக்கும் உள்ளாகியிருக்கின்றன.


இது ஒருபுறமிருக்க, எதிர்வரும் 19 ஆம் திகதி தமிழகத்தில் முதற்கட்ட வாக்குப் பதிவுகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், ஒவ்வொரு கட்சியினரும் ஒருவர் மீது ஒருவர் சேறை வாரியிறைத்துப் பரப்புரைகளில் "பிஸியாக" இருக்கின்றனர். தமிழகத்தில் ஆளும் தி.மு.க. 40 தொகுதிகளிலும் வெற்றி என்ற இலக்கோடு களமிறங்கியிருக்கின்றது. காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்திருக்கும் தி.மு.க. 34 தொகுதிகளில் தனது வெற்றியை உறுதி செய்திருக்கின்றது என்று உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன. ஆனால் வேலூர், சிதம்பரம், விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம், கன்னியாகுமரித் தொகுதிகளில் தி.மு.க. வுக்கு பலத்த சவால் உள்ளது என்று தெரிகின்றது.


> மத்தியில் ஆளும் பா.ஜ.க. பெருமெடுப்பில் பரப்புரைகளை முன்னெடுத்திருந்தாலும் தமிழகத்தில் வெற்றிவாய்ப்புக் குறைவாகவே இருக்கின்றது. பா.ஜ.க. ஒரு தொகுதியைக் கைப்பற்றலாம் என்று கூறப்படுகின்றது.

மத்தியில் ஆளும் பா.ஜ.க. பெருமெடுப்பில் பரப்புரைகளை முன்னெடுத்திருந்தாலும் தமிழகத்தில் வெற்றிவாய்ப்புக் குறைவாகவே இருக்கின்றது. பா.ஜ.க. ஒரு தொகுதியைக் கைப்பற்றலாம் என்று கூறப்படுகின்றது. தமிழகத்தின் மற்றொரு பிரதான கட்சியாக இருந்த அ.தி.மு.க. தற்போது பிளவடைந்திருக்கும் நிலையில், ஆளும் தி.மு.க.வுடன் மோதக்கூடிய பலத்துடன் தமிழகத்தில் கட்சிகள் இல்லை என்றே கருதப்படுகின்றது.

நாம் தமிழர் கட்சியின் வாக்கு வங்கி கடந்த தேர்தல்களில் அதிகரித்திருந்த நிலையில், இம்முறையும் நாம் தமிழர் கட்சி கவனிக்கத்தக்க அளவில் மாறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் நாம் தமிழர் கட்சி தனது சின்னமான விவசாயி சின்னத்தை இழந்து இப்போது 'ஒலிவாங்கி' (மைக் )சின்னத்தில் களமிறங்குகின்றது. இது சில சந்தர்ப்பங்களில் அவர்களின் வாக்கு வங்கியில் சரிவை ஏற்படுத்தக் கூடும் என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.

மத்தியில் ஆளும் பா.ஜ.க.வுக்கு தமிழ்நாடு எப்போதும் எட்டாக்கனியாகவே இருக்கின்றது. இம்முறை தமிழகத்தில் நுனிவிரலையாவது பதித்துவிடவேண்டும் என்று கங்கணம் கட்டியிருக்கின்றது பா.ஜ.கட்சி. பிரதமர் நரேந்திர மோடி கூட, நேரடியாக தமிழகத்தில் பரப்புரைகளில் இறங்கியிருக்கின்றார். ஆனால் தமிழகத்தில் கால்பதிக்கும் பா.ஜ. கவின் கனவு, இம்முறையும் கானலாக மாறவே அதிக சந்தர்ப்பங்கள் உண்டு என்று கூறுகின்றனகள நிலைவரங்கள். தலையால் கிடங்கு கிட்டினாலும், முடிவு மக்களின் விரல்களிலேயே. ஜூன் மாதம் 4 ஆம் திகதி அந்த முடிவு தெரிந்துவிடும். ■





# அநுரகுமாரவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுதி அளிக்கின்றது. ஆனால் ஊழலும் முறைகேடும் குடும்ப ஆட்சியும் எங்கிருந்து வந்தன? இலங்கைத் தீவின் ஜனநாயக இதயம் எங்கே தோல்வி அடைந்தது? இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ள மறுத்த போதுதான்.அதாவது இனப்பிரச்சினைதான் நாட்டின் எல்லாப் பிரச்சினைகளுக்குமான தாய்ப் பிரச்சினை. அதை ஜே.வி.பி. ஏற்றுக் கொள்கிறதா? ஆயின் அதற்கு அவர்கள் முன்வைக்கும் தீர்வு என்ன? ஏனைய கட்சிகளைவிட வித்தியாசமான ஒரு தீர்வை அவர்கள் முன்வைப்பார்களா? அதைப் பகிரங்கமாக சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துக் கூற ஜே.வி.பி. தயாரா?

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் அவர்களுடைய பாரம்பரியத் தாயகம் ஆகிய வடக்கு - கிழக்கு இணைப்பை ஜே.வி.பி. ஏற்றுக் கொள்கின்றதா? ஏற்கனவே வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிராக வழக்குப் போட்டு சட்டரீதியாக அந்த இணைப்பைப் பிரித்தது ஜே.வி.பி.தான். அதற்காக ஜே.வி.பி. தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்குமா? அல்லது தான் செய்தது சரி என்றால் அதற்குரிய விளக்கத்தை ஜே.வி.பி. பகிரங்கமாகக் கூறுமா? அதாவது ஜே. வி.பி. பகிரங்கமாக பொறுப்புக் கூறுமா?

இவை இரண்டாவது தொகுதிக் கேள்விகள். மூன்றாவது தொகுதிக் கேள்விகள் வருமாறு... யுத்த காலத்தில் ஜே.வி.பி. படைத்தரப்புக்கு ஆட் சேர்த்துக் கொடுத்தது. போர் வெற்றிகளைக் கொண்டாடியது. ஆனால் தமிழ் மக்கள் அந்த வெற்றிகளை இனப்படுகொலை என்று வர்ணிக்கின்றார்கள். இது தொடர்பாக ஜே.வி.பி.யின் நிலைப்பாடு என்ன? அவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தைப் பொறுப்புக் கூற வைக்கும் பொறி முறை ஒன்று ஐ.நா.வில் செயற்பட்டு வருகின்றது. போரை ஆதரித்த, போரை வழிநடத்திய அனைவரும் அதற்குப் பொறுப்புக் கூறவேண்டும். ஜே.வி.பி. பொறுப்புக் கூறுமா ?

நான்காவது கேள்வி, ஜே.வி.பி.யானது அதன் முதலாவது ஆயுதப் போராட்டத்தின்போது புதிதாக இணைக்கும் அங்கத்தவர்களுக்கு நடத்திய அரசியல் வகுப்புகளில் ஐந்தாவது வகுப்பில் மலையகத் தமிழர்களை இந்திய விஸ்தரிப்புவாதத்தின் கருவிகள் என்று விவரித்தது. ஜே.வி.பி. இப்பொழுதும் அதே நிலைப்பாட்டோடு தான் காணப்படுகின்றதா? இந்த விடயத்தில் மலையக மக்களுக்கு எதிரான தனது முன்னைய நிலைப்பாட்டுக்காக ஜே.வி.பி. பகிரங்கமாக மன்னிப்புக் கேட்குமா?

மேற்படி கேள்விகளுக்கு ஜே.வி.பி.யும் ஜே.வி.பி.க்கு வாக்களித்தால் என்ன என்று கேட்கும் தமிழர்களும் பதில் சொல்லவேண்டும்.

கனடாவிலும் யாழ்ப்பாணத்திலும் அநுரகுமார ஆற்றிய உரைகளில் காணப்படும் கவர்ச்சியான மனிதநேய வார்த்தைகளைக் கண்டு மயங்கும் தமிழர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ளவேண்டும். இனப்பிரச்சினை ஒரு மனிதாபிமானப் பிரச்சினை அல்ல. மொழிப் பிரச்சினை வழிபாட்டுப் பிரச்சினை போன்றனவும் உதிரிப் பிரச்சினைகள் அல்ல. அவை யாவும் தமிழ் மக்களின் கூட்டுரிமைகள் சம்பந்தப்பட்டவை. கூட்டுரிமை என்று எப்பொழுது கேட்கலாம் என்றால் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால்தான். ஆனால் ஜே.வி.பி.யும் அதற்கு வாக்களித்தால் என்ன என்று கேட்கும் தமிழர்களும் அரசியல் அடர்த்தி மிக்க விடயங்களை மேலோட்டமாகவும் மனிதாபிமான வார்த்தைகளிலும் கதைத்து விட்டுப் போகப் பார்க்கின்றார்கள். அரசியல் விவகாரங்களை அவற்றுக்குரிய அரசியல் அடர்த்தி மிக்க சொற்களின் ஊடாகத்தான் உரையாடலாம். அடர்த்தி குறைந்த சொற்களுக்கு ஊடாக உரையாடுவதே ஓர் அரசியல் தான்; தந்திரம் தான்.

ஜே.வி.பி. வெளிப்படையான அரசியல் அடர்த்திமிக்க வார்த்தைகளில் இனப்பிரச்சினை தொடர்பில் உரையாடவேண்டும். அவ்வாறு உரையாடினால் தென்னிலங்கையில் உள்ள சிங்கள - பௌத்த வாக்குகளை அவர்கள் இழக்க வேண்டிவரலாம். எனவே இனப்பிரச்சினை தொடர்பில் ஜே.வி.பி. தெளிவாகப் பேசாமல் ஆனால் கவர்ச்சியாக மனிதாபிமான நோக்கு நிலையில் இருந்து பேசிவருகிறது. ஜே.வி.பி.யில் முன்பு உறுப்பினராக இருந்து அதிலிருந்து விலகிய ஒருவர் எழுதிய நினைவுக்குறிப்பு ஒன்றில் அவர் பின்வரும் பொருள்படக் கூறுகிறார். "ராஜபக்சக்கள் வெளிப்படையாகத் தெரியும் இனவாதிகள். ஆனால் ஜே.வி.பி. சமூக நீதியின் பின் பதுங்கும் ஓர் இனவாதி" என்று. இக்கூற்று உண்மையா, இல்லையா என்பதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு ஜே.வி.பி.க்கு மட்டுமல்ல ஜே.வி.பி.க்கு வாக்களித்தால் என்ன என்று கேட்கும் தமிழர்களுக்கும் உண்டு. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் மடையர்கள்?

ஏரியிலிருந்து தண்ணீர் வெளியேற தமிழர்கள் கண்டுபிடித்த தொழில்நுட்பம்தான் 'மடை'.

மடைகளை அமைக்க முதலில் பனைமரங்கள் பயன்படுத்தப்பட்டன.

வைரம் பாய்ந்த கட்டை என்று சொல்லப்படும் மரங்களையே தேர்வுசெய்து அதன் உட்புற தண்டை நீக்கிவிட்டால் உறுதியான நீண்ட குழாய் தயாராகிவிடும். அதனை ஏரியின் அடியாழத்தில் பதித்து, அதன் உள் ஓட்டையில் கோரை, நாணல், களிமண் கலந்து அடைத்துவிடுவார்கள். இதுதான் ஆரம்பகால மடை. பிற்காலங்களில் பாறைகள், மரச்சட்டங்களில் மடைகள் அமைக்கப்பட்டன. வெள்ளக்காலங்களில் மடைகளைத் திறப்பதற்கென்றே ஆட்கள் இருப்பார்கள். மடையைத் திறப்பது சாதாரண விடயமில்லை. உயிரைப் பணயம் வைத்து நீருக்குள் மூழ்கிச் செய்யும் பெரிய சாகசப்பணியாகும்.


மழையால் ஏரியில் தண்ணீர் நிரம்பி, கரையை உடைத்துக்கொண்டு செல்வதற்குமுன், ஒரே ஒருவர் மட்டும் ஏரிக்கரைக்குச்சென்று கடல்போல் கொந்தளிக்கும் ஏரிக்குள் குதிப்பார்.

மூச்சடக்கி நீரில் மூழ்கி அடியாழத்தில் இருக்கும் மடையின் அடைப்பை திறந்துவிடுவார்.

ஏரி அல்லது கண்மாயிலிருந்து மடை திறக்கப்பட்டு ஓடை வழியாக விவசாய நிலங்களுக்குச் செல்லும். மடை திறந்ததும் புயல்வேகத்தில் வெளியேறும் வெள்ளம் மடைதிறந்தவரையும் இழுத்துச்செல்லும். அந்த வேகத்திலிருந்து தப்பிப் பிழைப்பது மிகவும் கடினம். மடை திறக்கச் செல்பவர்கள் உயிர்பிழைப்பது அரிது. மடை திறக்கச்சென்று மாண்டவர்கள் அதிகம், மீண்டவர்கள் குறைவு.

இவர்கள்தான் 'மடையர்கள்' என அழைக்கப்பட்டார்கள். இனி யாரையாவது 'மடையா' என்று திட்டும் முன் யோசியுங்கள்.



ற. அனாகா,
தரம் - 1A
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை




**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.




**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
0773165555
Sanjeevi@uthayan.com



**N. நோஷிகன்**
தரம் - 8D
J.K.H.C



**கி.யனுசன்**
தரம் - 8
G.T.M.S பாடசாலை



**ற. அபரா,**
தரம் - 7A
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை



**S.ஹன்சிகா**
தரம் - 7D
யா/ இந்து மகளிர் கல்லூரி



**வி.சர்வகன்**
தரம் - 5
இணுவில் சிவகாமி அறநெறிப்பாடசாலை



**ந.அனிஷ்ராம்**
தரம் - 6C
யா/ மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org